தென்மொழி

சுவடி: 15; ஓலை 7; ஓர் உருபா.

பாவாணர் பல்லாண்டு வாழ்க!

ஆசிரியர்

பெருஞ்சித்திரனர்

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0.625: தென்மொழிப் பாவலருக்கு, தி. க. வினரின் இறை மறுப்புக் கொள்கையைக் கைவிடச் சொன்ன போதே நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதை இனங்காட்டி விட்டீர்கள். ஆர். எசு. எசு. **(R.S.S)** மேடையில் **'ஸ்ரீபெருஞ்சித்திர'**னாகத் தோன்றிப் 'பிரசங்'கித்ததும் உங்களைச் சரியாகவே அடையாளங் காட்டியது. இப்போது தமிழெழுத்துச் சீர்மை பற்றிய உங்கள் ஆசிரியவுரையும் பாடலும் கண்டேன். எழுத்துச் சீர்மையில் உங்களுக்கு முரண்பாடு இருக்கலாம். ஆனால் அதை வெளிப்படுத்தும் முறை இப்படியா? நரகல் நடையைக் கக்கும் நாலாந்தர அரசியல்காரனையும் தோற்கடிக்க வேண்டும் என்ற நினைவுடன் தூவலை எடுத்தீர்களோ! இப்படியெல்லாம் எழுதி உங்கள் தகுதியைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். எழுத்துச் சீர்மை முயற்சியையும், அதற்குக் கரணியமானவர்களையும் மாபெரும் எதிரியாக நினைத்துக் கொண்டு 'பொம்மைச் சண்டை' போட முனைந்த நீங்கள்-உண்மையான எதிரிகளுக்குப் பாதுகாப்புக் 'கவச'மாகி விட்டீர்கள் என்றே நான் புரிந்து கொள்கிறேன்.

— செந்தலை. **ந. கௌதமன்**, தஞ்சை 613101.

0:626: என்றுமுள தென்றமிழின் எதிரிலாப் பாவல, பணிவான தமிழ் வணக்கம். இழிதகைமை தீராத இற்றைத் தமிழகவரசின், கருத்துக்குப் பொருந்தாத எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்த்துங் கண்டித்துந் தாங்கள் எழுதிய ஆசிரியவுரை ஓர் அருமையான மூடமதித் திறவுகோலாகும். இன்றியமையாத் தேவை கருதி ஏற்படுவதே சீர்திருத்தம். ஒன்று, முழு வளர்ச்சியடையா நிலையில், அதன் வளர்ச்சி கருதி மாறுதல் அல்லது சீர்திருத்தம் அமைதலே இயல்பு. தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு என்ன உடனடித் தேவை? இயல்பாக உள்ளவற்றில் நேர்ந்த இடர்ப்பாடு யாது? பெரும்பயன்கள் யாவுள? ஆய்ந்தோய்ந்து பாராது, தமிழதிகாரியாகத் தம்மைக் கருதிக் கொண்டு, தான்தோன்றித் தனமாக எழுத்துச் சீர்திருத்தஞ் செய்யத் துணிந்த அரசை, அஞ்சாது எதிர்த்து இடித்துரைத்துத் திருத்தும் தாங்கள் அழகிய தமிழ் மகளின் மெய்க்காவலர் என்பதில் ஐயமின்று. தன்னலம் பேணவும், தனது முன்னேற்றத்திற்காகவும் 'தமிழ்மொழி'யை இரையாக்கக் கூடிய-குமுகாயக் களைகள் மலிந்த தமிழகத்தில், தமிழுக்கு இரையாகி, அதன் வளர்ச்சிக்கு உரமாகும் தங்களைப் போன்றோர் உண்மைத் தமிழ்ப் பற்றுளர்களை உடனே-இனங்காட்ட வல்லவர் மட்டுமன்றித், தமிழுக்குத் தாழ்வு-நேருங்காலெல்லாம், யாருக்கு மஞ்சாது தென்மொழி எனுந் தூய்தமிழ்ப் படைக்கலத்தால் தாங்கி நிறுத்துகின்றீர்கள் என்பதும் வெள்ளிடைமலை. வெல்லரிய மாந்தரெலாம் வியந்து போற்றுந் தென்மொழியே எங்களது வழித்துணை; ஒளிச்சுடர்; கலங்கரை விளக்கம். நம்பிக்கை

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை ; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி: 15 ஓலை: 7.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

சுறவம் தி. பி. உ௰௰கூ-

சனவரி- பெப்ருவரி-1979.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**

ஆசிரியர் **மா. பூங்குன்றன்.** அறி.இ. க.மு.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழிமறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தமிழக அரசும் தமிழ்வளர்ச்சி நடவடிக்கைகளும்!

கடந்த சுறவம் 2-ஆம் பக்கல் (15-1-79), சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் தமிழக அரசால் சென்ற ஆண்டைப் போலவே சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பொதுவாகவே நாம் விழாக்களிலும் வேடிக்கைகளிலும் மற்ற எவற்றினும் விட அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம் என்பது ஒருபுறமிருக்க, இந்த ஆண்டு கொண்டாடப் பெற்ற திருவள்ளுவர் திருநாள் ஒரு தனிச்சிறப்புப் பெற்ற நாளாகவே-ஒரு வகையில் நாம் மகிழ்ந்து பாராட்டத்தக்க விழாவாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழக அறிஞர் சிலர் அவ்விழாவில் பாராட்டப் பெற்றுள்ளனர்.

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொள்ளல் **(குறள்: 443)**

—என்னும் திருவள்ளுவர் திருவாய்மொழிக்கேற்ப, தம் வாழ்நாள் முழுவதையும் பொதுத் தொண்டிற்காகவே கழித்த சான்றோர்களைப் பேணிப் புரந்து கொள்வது அரசின் தலையாய கடமைகளில் ஒன்று. பெரும்பாலும் அறிஞர்கள் தம் வாழ்நாளிலேயே பாராட்டப் பெறுவதில்லை என்பது நம்நாட்டில் நெடுங்காலமாக இருந்துவரும் ஒரு பெருங் குறைபாடாகும். அறிஞர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பெரிதும் ஆராய்ச்சி விளைவுகளிலும் அறிவுத்தொண்டிலுமே ஈடுபட்டு, மக்கள் நல்லறிவு எய்த வேண்டும் நற்பண்புடன் வாழ்தல் வேண்டும் என்னும் தலையாய குறிக்கோளிலேயே வாணாளைக் கழித்து வருவதால், அவர்கள் அரசியல்காரர்களைப் போலவோ, மற்ற வணிக வாழ்க்கையினரைப் போலவோ தங்கட்கென்று வீடு, நிலபுலம் என்னும் வாழ்வியல் நலன்களைத் தேடிக் கொள்வதில் நாட்டங் குறைந்தவராகவே இருப்பர். மேலும் இக்காலத்தில் அறிவு ஆரவாரம் மிகுந்து, நாகரிகப் புன்மைப் போலி நிலைகளில் மக்கள் பெரிதும் ஈடுபட்டு, விளம்பர நாட்டம் உடையவர்களாக இருப்பதால், வாழ்வுநிலைப் போட்டி பூசல்களில் உண்மையையும் ஊக்கமும் உடைய அறிஞர்கள் பெரும்பாலும் அவர்களினின்று விலகியே நிற்க வேண்டி உள்ளனர். அவ்வாறில்லாத ஒரு சிலரோ முன்னவர்களுக்கு மாறுகக் கால நிலைகளை நன்கு விளங்கிக் கொண்டு, தாமும் மக்கள் நிலைக்குச் சென்று, தாம் கற்ற கல்வியையும் பெற்ற அறிவையும் வாணிகப் பொருள்களாகக் கொண்டு, எவ்வாறேனும் தங்களுக்கேற்ற நல் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் திறம்பெற்றவர்களாக விளங்குகின்றனர். ஆனால், மெய்ம்மைத் தமிழ் அறிஞர்களோ, தங்களின் அறிவு நோக்கமே பெரிதெனக் கொண்டு, பெருமிதமும் தன்மானமும் மிக்கவர்களாகவும், இவ்விழிந்த ஈடுபாடுகளை அறியாதவர்களாகவும், அறிந்தும், அவற்றில் தாமும் ஈடுபட விரும்பாதவர்களாகவுமே இருந்து, மிகவும் வறுமையுற்றுத் தம்மையும் தம்மை நம்பியுள்ள குடும்பத்தினரையும் பெரிதும் அல்லல்களுக்கு ஆளாக்கிக் கொள்கின்றனர். இதனாலேயே திருவள்ளுவர் அறிவு முயற்சியுடையவர்களையும், செல்வ முயற்சியுடையவர்களையும் வேறு வேறுகப் பிரித்து உலகின் இரண்டு இயற்கை நிலைகளை உடையவர்களாகச் சுட்டிச் சொல்வநீர்.

இருவேறு உலகத் தியற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

இவ்வியற்கை நுண்ணுணர்வுகளையெல்லாம் பண்டைத் தமிழ் அரசர்கள் நன்குணர்ந்திருந்தமையாலேயே அறிவுணர்வு மிக்க புலவர்களை அவர்கள் போற்றினார்கள்; புரந்தார்கள், அதனால் வளப்ப மிக்க அளப்பரிய அவர்களின் அறிவாற்றல் கொண்டு அரிய

பெரிய அறிவாக்கங்களை அவர்களால் செய்து தர முடிந்தது. காலப் போக்கில் அறிஞர்களைப் பேணிப் புரக்கும் அரிய நிலை அரசுப் பொறுப்புள்ளவர்களால் மறக்கப்பட்டது. அறிவு விளைவும் முன்பு போலன்றிப் பெரிதும் குறைந்து போனது. போகவே, முற்காலத்துத் தோன்றிய திருக்குறள், திருமந்திரம் போலும் அறிவு நூல்களும் கழக இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பவி ராமாயணம் போலும் வளங்கொழிக்கும் இலக்கிய நூல்களும் இன்றுள்ள ஒருவராலும் செய்யவியலாமற் போயிற்று. அதனால் போலி இலக்கியங்களும் புன்மை புரைமை சான்ற அறிவு நூல்களும் புற்றீசல்கள் போல் புலந்தொறும் புலந்தொறும் வெளிவரத் தொடங்கின. இவற்றுள் ஒருசில மெய்யறிவு நூல்களையேனும் காண்டல் மிகமிக அரிதாகப் போய் விட்டது.

இவற்றையெல்லாம் ஒருவாறு விளங்கிக் கொண்டு தானோ என்னவோ, இற்றைத் தமிழக அரசு அறிஞர்களைப் பாராட்டும் முயற்சியில் ஒரு சிறிது ஈடுபட்டுக் கவனம் செலுத்தி வருகிறது. இது பெரிதும் பாராட்டுக்குரிய நற்செயலாகும். திருவள்ளுவர் திருநாளில் தமிழக முதல்வர் திரு. இராமச்சந்திரன் அவர்கள், தமிழுக்காகவே பெரிதும் உழைத்த, உழைத்து வருகின்ற ஐந்து தமிழ்ச் சான்றோர்க்கும், தமிழறிஞர் இருபத்தெட்டுப் பெயர்களுக்கும் பாராட்டும் பரிசிலும் வழங்கியுள்ளார். அவர்களுடன் ஏழு இயலிசை நாடகக் கலைஞர்களுக்கும் அரசவைக் கலைஞர்கள் என்னும் பெருமையும் பேறும் அளித்துள்ளார். பாராட்டப் பெற்ற தலையாய ஐந்து சான்றோருள், நம் மொழிநூல் மூதறிஞர், மொழி ஞாயிறு, தமிழுக் மாகவே தம்மை ஒப்படைத்துக் கொண்ட தமிழ் மாமுனிவர் திரு. **ஞா. தேவநேயப் பாவாணரும்** ஒருவர் என்று அறிந்து நாம் மிகவும் பெருமிதம் கொண்டோம். மற்ற மூவரும், முதுபேரறிஞர், பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரையார்** அவர்களும், நூற் பதிப்புத் தந்தையும், அயராத தண்டமிழ்க் காவலரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சரும் ஆகிய திரு. வ. **சுப்பையா** அவர்களும், கல்விச் செல்வரும், திருக்குறளைப் பள்ளிகளிலெல்லாம் பாடமாக வைத்த பெருமை பெற்றவரும், அறிஞரும் ஆகிய திரு. **தி. சு. அவிநாசிலிங்கம்** அவர்களும், கலைக்களஞ்சியத் தொகுப் பாசிரியரும் இசைப் பேரறிஞரும் ஆகிய திரு. **ம. ப. பெரியசாமித் தூரன்** அவர்களும் ஆவர். இவர்கள் ஐவரும் அரசுத் பாராட்டுக் குரிய தகுதி படைத்த தமிழ்ச் சான்றோர்கள் என்பதில் எள்ளத் துணையும் ஐயமில்லை. மற்று இவர்களுடன் அரசுதவி பெறத் தேர்ந் தெடுக்கப் பெற்ற தமிழறிஞர் இருபத் தெண்மரும் அத்தகுதி பெறும் திறமை மிக்கோரே என்பதிலும், பாராட்டும் பராமரிப்பும் பெற்ற கலைஞர் பிறரும் கூட (ஓரிருவர் நீங்கலாக) அவ்வகையில் தகுதி யுடையவராகவே இருக்கலாம் என்பதிலும் நமக்குக் கருத்து வேறு பாடில்லை.

பொதுவாகவே, தமிழ்ப் புலவர்களைத் தாழ்வாக மதிக்கும் அரசியல் ஆரவாரமும், அறியாமையும் தமிழர்களுக்குள்ளேயே மிகுந்துள்ள இக்காலத்தில், தமிழ்மொழிக் குழைத்த—உழைக்கின்ற பெருமக்களைப் பாராட்ட திரு. இராமச்சந்திரன் அவர்கள் முன்வந்தது அவரின் பெருந்தன்மையையும் அருள் உள்ளத்தையும் துணிவையுமே காட்டும். எனினும் சமசுக்கிருதப் புலவர்களுக்குத் தரப்பெறும் அரசுதவியினும், பெருமையினும், தமிழறிஞர்களுக்குத் தரப்பெற்ற இவ்வுதவியும், பெருமையும் அவ்வளவு பெரியனவாக நமக்குப் படவில்லை. அவ்வகையில் முதலமைச்சர் இன்னும் சற்றுத் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டிருக்கலாம். இனி, கலைஞர்களுக்குத் தந்த பெருமையும் உதவியும், தமிழறிஞர்களுக்குத் தந்த பெருமையுடனும் உதவியுடனும் ஒப்பிடுகையில் மாணப் பெரியன. இவ்வகையில் தமிழக முதல்வர், பரிசு பெறுவோரின் வரிசை (தகுதி) யறிந்து பெருமைப் படுத்தியிருக்க வேண்டும். ஏனெனில் வரிசை யறிதல் என்பது மிகக் கடினமான ஒன்று.

> **'வரிசை யறிதலோ அரிதே பெரிதும்**
> **ஈதல் எளிதே'**

—என்பது **கபிலர்** (புறம். 121) வாய்மொழி. பரிசில் தருவது கூட அவ்வளவு பெரிதன்று; பரிசிலும் வரிசையறிந்து தருதல் வேண்டும் என்பது அரச மரபு. **'பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்க'** வேண்டுமென்பது சான்றோர் கருத்து.

இனி, முதலில் உள்ள ஐந்து தமிழ்ச் சான்றோர்களையும் ஒரே வணக்கத் தகுதியினராகக் கருதி, ஐவருக்கும் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் ஒரே தகுதிநிலைப் பட்டம் தரபபெற்றுள்ளது. அவர்கள் ஐவரின் வெவ்வேறு தகுதி நோக்கி வேவ்வேறு பட்டங்களை வழங்கி யிருக்கலாம் என்பது நம் கருத்தாகும். மேலும் அவர்கள் ஐவருள் பாவாணரைப் போலும் ஓரிருவர் மிகுந்த வறுமையும், வாழ்க்கை ஏந்துக் குறைவும் உடையவர்கள். அவர்களுக்கு வெறும் பட்டமும் பதக்கமும் மட்டும் கொடுத்துப் பாராட்டியது போதாது; நடுநிலையும் ஆகாது. அப்பட்டத்தையும் பதக்கத்தையும் கொண்டு அவர்களால் தம் வாழ்வு நிலைகளை எவ்வாறு சரிப்படுத்திக் கொள்ள முடியும்? பாவாணர் இன்னும் வாடகை வீட்டிலேயே வாழ்ந்து வருவது அரசுக்குத் தெரியும். குடும்பத்துணையின்றித் தன்னந் தமியராகவே மிகவும் எளிமையான முறையில் வாழ்ந்துவரும் அவருக்கு, அவர் அறிவு மேம்பாட்டு நிலை கருதி இன்னும் கூடுதலான பரிசிலையும் வாழ்வியல் ஏந்துகளையும் வழங்கியிருக்கலாம். வெறும் பட்டத்தையும் பதக்கத்தையும் வைத்துக்கொண்டு அவர் என்ன செய்யப் போகிறார்? அவர் போன்றவர் செய்யும் அறிவியல் முயற்சிகளுக்குத் துணைநிற்பதே அவர்களுக்குத்தரும் சரியான பரிசிலாக இருக்க முடியும். பரிசில் வழங்கப்பெற்ற கலைஞர்களுக்கு மாதம் ஆயிரம்

உருபா உதவியைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு அரசு வழங்கி யுள்ளது. இதில் மிகுந்த செல்வநிலையில் உள்ள வைசயந்திமாலா போலும் கலைஞர்கள் தகுதியுள்ளவர்களாகக் கருதப் பெற்றது எப்படி என்பது நமக்கு விளங்கவில்லை. எனவே பரிசுக்குரியவர்கள் நேர்மை யான தகுதி யடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்றும் சொல்ல முடியாது. கடந்த காலத்திலும் இதுபோன்ற பிழைகள் நேர்ந்திருக்கின்றன. இதற்கு முதல்வரின் தன் விருப்பமே கரணிய மாக இருக்க முடியும். இது நயன்மை ஆகாது. அவருக்கு வேண்டி யவர்க்கு மட்டும் வழங்குவது கொடையையே மாசு படுத்துவதாகும்.

பெரும்பாலும் அரசு, அறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசில் தருவது அதன் பெருமையை மேம்படுத்திக் கொள்ளவும், அரசியல் நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் ஓரளவு பயன்படும் என்றாலும், அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் நேர்ந்த தாழ்வைப் போக்குவதற்கே பெரிதும் பயன்பெறும். இவ்வகையில் அரசின் நன்மைகளைப் பெறுவதற்கு அதன் நடைமுறைகளை முற்றும் ஆதரிப்பது போன்ற நடிப்பால், தகுதியற்றவரும் தகுதியுள்ளவர் போல், அரசின் கண்களில் படுவர். அந்நிலையிலுள்ளோர்,

'இகழின் இகழ்ந்து,ஆங்கு இறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ந்து' **(நீதிநெறி. 44)**

அரசுக்கு நல்ல பிள்ளையாக நடிப்பர். சிலர் அவர்களை அரசுக்குப் பரிந்துரையும் செய்வர். இத்தகைய 'வரிசை யறியாக் கல்லென் சுற்றத்தை' நடிப்பாலும், பட்டறிவாலும் சிறந்துள்ள முதலமைச்சர் இனங்கண்டு கொண்டு, நேர்மையான உள்ளத்துடன் தக்கார்க்குத் தக்க உதவிகளை நல்குதல் வேண்டும். இதில் எல்லாரையும் பொது வாகக் கருதி விடுதல் கூடாது.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். **(குறள் 528)**

தம்மைப் பாராட்டுகிறவர்களை மேம்படுத்துவதற்கும், தம்மைத் தரக் குறைவாக வசைபாடுபவர்களை வாயடக்குவதற்கும் என்பதற்காக அரசு தாறுமாறுகப் பதவிகளையும் பட்டங்களையும் பரிசில்களையும் வாரி வழங்கி விடக்கூடாது. அவ்வரசியல் தந்திரம் அறிவுத் தகுதியின் பாற் சென்று விடாமல் காத்துக் கொள்வது நலம். அப்படிச் செல்வது உண்மையான வள்ளண்மையும் ஆகாது.

இனி, இப்பரிசில்களுக்கெல்லாம் மேலான வகையில், முதல்வர் விழா மேடையில் அறிவித்த அறிவிப்பே மிகவும் சிறப்பு வாய்ந்தது. "தமிழ் காக்கப் படவேண்டும். தமிழைக் காப்போம் என்று சொல்கிற பொழுது, இன்னொரு மொழியை அழிப்போம் என்று கருதுவதாகவோ சொல்லுவதாகவோ எவரும் எண்ணத் தேவையில்லை. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று மக்கள் எதிர்பார்த்த கடமையை இந்த அரசு நிறைவேற்ற வேண்டியிருக்கிறது." என்று கூறிய முதல்வர்,

வரவிருக்கும் அரசின் பொருள் நிலையறிக்கையில் தமிழுக்காகச் சில திட்டங்களை வெளியிட விருப்பதாகவும், கட்சி, சாதி, தேர்தல் நினைப்பு ஆகியவற்றை இப்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட்டுத் தமிழ் வாழ, தமிழ் மககள் வாழ, தமிழைக் காப்பாற்ற ஒன்றுபடுவோம் என்றும் கூறியுள்ளார்.

அவர் கூற்று உண்மையானால், பாராட்டத் தக்கதாகும். தமிழ் மொழி தன்னை மீட்டுக்கொள்ள கடந்த மூவாயிரமாண்டுகளாக நடத்தி வரும் போராட்டத்தில் இன்னும் எவ்வளவோ முயற்சிகள் நடைபெற வேண்டியுள்ளன. இதுவரை அரசு அதிகாரத்திலிருந்த எவரும் அதுபற்றித் தீர எண்ணிச் செயல் படவில்லை. இவ்வகையில் முதல்வர் திரு. இராமச்சந்திரன் ஓரளவு முயற்சியிலாகிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வாரானால் தமிழ்மொழி உண்மையிலேயே சிறந்து விளங்கும். இப்பொழுது எப்படி இந்தித் திணிப்பால் தமிழ்மொழி இரண்டாந்தர மொழியாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்று கருதுகின்றோமோ, அதேபோல், கடந்த காலத்தில் இதில் திணிக்கப் பெற்ற சமசுக்கிருதம், ஆங்கிலம், அரபி போலும் எண்ணற்ற சொற் கலப்புகளாலும் தமிழ்மொழி ஏற்கனவே மிகவும் தாழ்ந்த இடத்தையே பெற்றுள்ளதை நாம் கருதிப் பார்க்க வேண்டும். இன்று தமிழ் மொழியில் பேசுவதையும் இழிவென்று கருதுகிறோம். எனவே ஏற்கனவே தமிழ்மொழிக்குக் கிடைக்க வேண்டிய பெருமையை ஆட்கொண்டுள்ள மொழிகளையும் களைதல் வேண்டும்; இப்பொழுது ஆள வருகின்ற இந்தி முதலிய மொழிகளையும் வராது தடுத்தல் வேண்டும். இம்முயற்சியிலெல்லாம் முதல்வர் அவர்கள் முழுக்கவனம் செலுத்துதல் வேண்டும். நல்லதெனக் கூறப்படுவதை அவர் தவறாது செய்வார் என்பதற்கு, அவர் திருவள்ளுவர் விழா நாளில் தெரிவித்த ஐ, ஔ நீக்கத் தவிர்ப்பையே சான்றாகக் கொள்ளலாம். அதுபோல், அவர் செய்ய விரும்பும் எழுத்துச் சீர்திருத்தத்தையும் மறு ஆய்வு செய்ய வேண்டுகிறோம். அத்துடன், அவர் உறுதி பூண்டிருக்கும் தமிழ்க் காப்பு நடவடிக்கைக்கு முதல்படியாக, பேரா. திரு. தங்கவேலனார் அவர்களால் தூய தமிழில் எழுதப்பெற்று, முன்னைய தமிழக அரசால் வெளியிடப் பெற்றதும், உண்மையான தமிழக வரலாற்று நிகழ்ச்சி களைக் கொண்டதும், அதன் பொருட்டாகவே கடந்த நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்ப் பகைவர்களான அதிகாரி களால் தடை செய்யப் பெற்றதும் ஆகிய **'தமிழ் நில வரலாறு'** என்னும் அரிய பாடநூலைத் தடை நீக்கம் செய்து வெளிப்படுத்தி, அவர் கூறிய கூற்றில் உள்ள உறுதியை மெய்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.



அச்சாகி வருகின்றன!
விரைவில் வெளிவர விருக்கின்றன!

பெருஞ்சித்திரனாரின்
பாடல் தொகுப்புகள்.

(கனிச்சாறு தொகுப்புகள்)

அரிய பாடல் களஞ்சியம்!

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக்கணக்கான தலைப்பு களின் கீழ் ஆயிரக்கணக்கான பாடல்கள் ஒரு சேரத் தொகுக்கப் பெற்று நான்கு தொகுதிகளாக அச்சேறி வருகின்றன.

முதல் தொகுதி: தமிழ், இந்தியெதிர்ப்பு, இனஎழுச்சி, ஆகியவை பற்றிய மொழி, இன உணர்வுப் பாடல்கள்:

இரண்டாம் தொகுதி: நாட்டுரிமை, பொதுமை உணர்வு, இளைய தலைமுறை ஆகியவை பற்றிய நாடு, மக்கள் உணர்வுப் பாடல்கள்!

மூன்றும் தொகுதி: காதல், இயற்கை, இறைமை, பொது ஆகியவை பற்றிய இலக்கியச் செழு மையும் மெய்யுணர்வும் நிரம்பிய பாடல்கள்!

நான்காம் தொகுதி: ஆசிரியர் இன்றுவரை தலைமையேற்றுப் பாடிய அனைத்துப் பாட்டரங்கப் பாடல் களும்!

தீங்கனிச்சாறு! தெவிட்டாத தூய இனிய செந்தமிழ்ப் பெட்டகம்;

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய இலக்கியப் பாச்சுரங்கம்!

வெளியீட்டு நன்னாளை விரைவில் எதிர்பாருங்கள்!

அன்பர்களுக்கு நன்றி!

தென்மொழி அன்பர்கள் பொங்கல் வாழ்த்துகளை ஆசிரியர்க்கும் குடும்பத்திற்கும் அனுப்பியிருந்தனர். அவர்கள் அனைவர்க்கும் தென்மொழி தன் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

பாவாணர்

பளபளப்பான கருத்த முகம்; ஒளி நிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக்கழுத்து; பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம்—இவற்றின் மொத்த உருவம் பாவாணர். பாவாணர் எனில் மொழியியல் ஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்** ஒருவரே.

தமிழ்மொழி ஆய்விலேயே ஐம்பதாண்டுகள் மூழ்கித்திளைத்த இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இந்நாள் வரை கண்டதே இல்லை. இவர் வாயினின்று சரமாரியாக வந்து விழும் தனித்தமிழ் ஆராய்ச்சிக் கருத்துகளை இதுவரை எந்த அறிஞரும் தமிழ்மொழிக்கு வழங்கி விடவில்லை. தமிழ்த்துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன. அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டு மொத்த முயற்சிக்குப் **'பாவாணர்'** என்றே பெயரிடலாம்.

அவர் கருத்துகள், முரிக்கப்பட்ட தமிழனின் முதுகெலும்பைத் தூக்கி நிறுத்தும் வல்லமை வாய்ந்தன; தூங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பும் வீறு நிரம்பியன; மங்கிக் கிடக்கும் தமிழ் மொழியின் செம்மாப்பினை உலகமெலாம் பறைசாற்றும் ஆற்றல் நிறைந்தன; மொழியாராய்ச்சி என்னவென்றே அறியாமற் கிடந்த தமிழனுக்கு மொழியுணர்வூட்டி, அதன்வழிப் பண்டைய வரலாறுணர்த்தி எழுச்சி பெறச் செய்வன. அவர் பேச்சும் எழுத்தும் தமிழரின் ஒவ்வொரு செவியிலும் அறிவிலும் பட்டு எதிரொலித்தல் வேண்டும். அப்பொழுது தான் தமிழன் தன்னுணர்வு பெறுவான்; தன்மானங் கொள்வான்; தன்னறிவுணர்வான்; மொழிப்புலங் காணாது வழிப்புலந்தப்பிய தமிழனுக்கு அவர் ஊட்டும் விழிப்புணர்வும், அதினின்றெழும் ஒவ்வோர் ஆய்வு முடிவும் தமிழர்க்கு என்றென்றைக்கும், ஒளிகாட்டி நிற்கும் என்பதில் ஐயமே யில்லை.

ஆனால், வெற்றாரவாரச் சொற்புகழ்ச்சியும் விளம்பரப் போலி மையும் இக்காலத்துக் கற்றாரிடத்தும் நிரம்பி வழியும் கரணியத்தால், மெய்ம்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு காண்பது மிகமிக அரிதாக உள்ளது. அன்றாடம் நடைபெற்றுவரும் அரசியல் சூழ்ச்சி களாலும், அறியாமையாலும், வறுமையாலும் பிற கல்வித் துறை களின் மேம்பாடுகள் அனைத்தையும் எடுத்துக்கூறவும் ஆளின்றிச் சீந்துவாரற்றுக் கிடக்கும் தற்காலத் தமிழகத்தில் ஏன் பிறந்தோம் என்று அறிஞர் அலமந்து கிடக்கின்றனர். அறிவியலும் வாழ் வியலும் மேனாட்டாரை எந்த அளவிற்கு ஆட்கொண்டனவோ அந்த அளவிற்குத் தமிழகத்தை அறியாமையும் மூட நம்பிக்கையும் ஆட்

கொண்டுள்ளன. இவ்விருள்சேர் இருநிலையும் ஒருசேரப் பெருகிக் கிடக்கும் இந்நாட்டில் போலிமையும் புன்மையுமே தலை தூக்கி நிற்கின்றன; அதிகாரம் பெறுகின்றன; எனவே உண்மை வலி வற்றுப் போகின்றது. இந்நிலையில் பாவாணரைப் போன்ற பேரறிஞர்களை நாடு இனங்கண்டு கொள்வது குதிரைக் கொம்பே!

தமிழகத்தின் தவக்குறையென்று நாம் எல்லோருமே சொல்லிக் கொள்கின்ற அறிஞரைப் பேணாத குறை தமிழ்நாட்டு மண்ணிலோ, மரங்களிலோ விளைவதன்று. அப்படிச் சொல்லியே தப்பித்துக் கொள்ளும் நம் ஒவ்வொருவருடைய மனத்திலும் விளைவது தான். அது வெறுங் குறையாக மட்டும் நின்றுவிடவில்லை; தமிழக வரலாற்றிலேயே என்றென்றைக்கும் துடைத்தெறியப்படாத கறையாகவே படர்ந்திருக்கின்றது. இதனை நம்மில் எல்லாரும் திருப்பித் திருப்பி ஒருவர் முகத்தில் ஒருவர் பூசிக்கொள்கின்றுமேயன்றி, இதனைப் போக்குகின்ற முயற்சியை நம்மில் எவரும் எக்காலத்தும் இன்று வரை செய்யவில்லை. காரணம் நமக்கிருக்கும் பகட்டான பேச்சு தான்; பார்ப்போரை மயங்க வைக்கும் நடிப்பு தான்; நமக்கேற்பட்ட அரசியல் திளைப்புதான்; அறிவை அறிந்து கொள்ள மறுக்கின்ற அறியாமைச் செருக்குதான்; மொத்தத்தில் நம் உடலில் ஊறிக் கிடக்கும் இருண்ட வாழ்க்கையின் ஈடுபாடுதான். இந்நிலைகள் இந்தத் தலைமுறையிலேயே அடியோடு தொலைக்கப்பட்டாலன்றி, இனி, அடுத்த தலைமுறையிலிருந்து தமிழக மண்ணில் அறிஞர்களே தோன்ற மாட்டார்கள் என்பது திருக்குறள் போன்ற உண்மை; தொல்காப்பியம் போன்ற உறுதி; பாவேந்தர் பாடல்கள் போன்ற தெளிவு!

தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர் திருத்தக்காரர்களும் எத்தனையோ காரணங்களைத் தம்தம் வரலாற்றறிவிற்கேற்பக் கூறினாலும் உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச் சரிவு; இரண்டு தமிழனின் மொழிச் சரிவு. இவ்விரண்டு சரிவுகளும் ஆரியப் பார்ப்பனர்கள் என்று இத் தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ அன்றே தொடங்கின. இச் சரிவுக்குத் தடுப்புச்சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால் ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும் இந்நாட்டிலுள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன்பட்டன. முதற்சரிவைக் கண்டுகாட்டியவர் பெரியார் **ஈ. வெ. இரா**. இரண்டாம் சரிவைக் கண்டு காட்டியவர் **மறைமலையடிகளார்**.

ஈ. வே. இரா. வின் குமுகாய முயற்சி மலையத்துணையென்றாலும், அதனால் இதுவரை ஏற்பட்டிருக்கின்ற பயன் ஒரு குன்றத் துணையே! அடிகளாரின் மொழி முயற்சி கடலத்துணை யென்றாலும், அதனால்

ஏற்பட்ட பயன் ஒரு கால்வாய் அத்துணையே. இவர்கள் செய்த இவ்வளவு அரும் பெரும் முயற்சிகளும் இப்படிப் பயனிற் குன்றியமைக்கு நம்மிடம் உள்ள பக்தவத்சல சுப்பிரமணியன்களும், வையாபுரித் தெ. பொ. மீ-க்களுமே காரணியம் ஆவர். இத்தகையோரின் உள்ளரிப்புகளால் பெரியாரின் குமுகாயத் தொண்டு அடி பருத்து நுனி சிறுத்துப் போனது; அடிகளாரின் மொழித் தொண்டு அடியகன்று இடை குறுகிப்போனது. இக்கால் இவ்விரு தொண்டு முயற்சிகளும் இளைஞர் தலைமுறையினரின் தோள்களைத் தாவிப் பற்றிக் கொண்டுள்ளன. இத் தலைமுறையில் இவற்றில் வெற்றியைத் தேடிக் கண்டானானால் தமிழன் ஆரியத்தினின்று பிழைத்தான்; இல்லெனில் ஆரியத்திற்கே பிழைத்தான்!

பெரியாரின் குமுகாயப்போராட்டம் புறந்தெரிவது, அடிகளாரின் மொழியியற் போராட்டம் அகமொடுங்கியது. அடிகளாருக்குப்பின் இப்போராட்டம் இருளுள் புகைபோல் ஒளி மழுங்கியது. பாவாணரின் விடாமுயற்சியோ, அதனை மீண்டும் புகையுள் தீப்போல் ஒளி சேர்த்தது.

பாவாணர்க்கு இக்கால் அகவை எழுபத்தேழு முடிந்து, எழுபத்தெட்டு தொடங்குகின்றது. 7—2—1902-இல் நெல்லை மாவட்டத்தில் உள்ள சங்கரநயினார் கோவிலில் பிறந்து, கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டிலேயே தம் முழுப் பொழுதையும் செலவிட்டு வரும் இம்மொழியியல் மூதறிஞர் இன்றுகாறும் தமக்கென ஓர் இடத்தையோ, ஒரு வீட்டையோ கூட உடைமையாக்கிக் கொள்ளாமல், சென்னையில் குடிக்கூலிக்கு ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வருகின்றார் எனில், இத்தமிழகம் அறிஞர்களைப் புறக்கணிக்கின்றது என்று கூறுவதா? அல்லது இதில் உள்ள மக்கள் அறிவைப் புறக்கணிக்கின்றார்கள் என்று கூறுவதா?

கருத்துகளைத் தம் அதிகாரிகளுக்கும், அரசியற் சாய்காலுக்கும் ஏற்பவளைத்துக் கொள்ளும் வையாபுரி, தெ. பொ. மீ. போன்ற சிலரின் திறனையோ, அல்லது கழகநூற் காட்சிகளைக் கற்பனை நூல்களாக்கி விற்பனை செய்து பொருள் குவிக்கும் பேராசிரியர் சிலரின் போக்கையோ, அல்லது எவரைக் கொண்டோ எழுதுவித்துத் தம் பெயரைப் பொறித்து வெளியிட்டுக் கொள்ள இசைவு தந்து, அதற்கீடாகப் பெரும் பொருள் பெற்றுக் கொள்ளும் நூலாசிரியர்கள் சிலரின் கள்ள வாணிக அமைப்பையோ பாவாணர் கற்றிருந்தால் அல்லது கைக்கொண்டிருந்தால், இவரும் தமக்கென வீடுகளும் மலைத்தோட்டங்களும் தெருவுக்குத் தெரு, மலைக்கு மலை வாங்கிப் போட்டுக் கொண்டு இயங்கியில் ஊர்ந்து கொண்டு திரியலாம். ஆனால், தன்மானத் திறவுகோலைக் கொண்டுதான் அறிவுப் பூட்டைத் திறக்க முடியும் என்று கண்ட மொழி வரலாற்றுப் பேராசிரியராகிய இவர் இத்தகைய போலித் தன்மைகளைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

இவர் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்ப்பது தமிழ்; கொண்டது தமிழ்; கொடுப்பது தமிழ்; விண்டது தமிழ்; விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும், தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப்பெற்ற தமிழின் முழுவுருவம் பாவாணர் என்னின் வியப்படையவும் வேண்டா; மிகையென்று கருதிவிடவும் வேண்டா. இக்கட்டுரையை எழுதும் இந்தக் கையும், அதை ஆட்டு விக்கும் இந்த மனமும் எளிதே எழுதிவிடாத சொற்கள் இவை. கோடிப் பொன் கொட்டிக் கொடுத்தாலும் "இவர் தமிழின் மொத்த உருவம்" என்னும் நான்கு சொற்களை இக் கையினிடத்திலிருந்து தகுதியுள்ளவர் தவிர வேறு எவரும் எழுதி வாங்கிவிட முடியாது. "தமிழின் ஏற்றத்தைப்பற்றி எவ்வளவும் உரையுங்கள்: ஆனால் ஆரியத்தை—வடமொழியைப்பற்றி எந்தக் கருத்தையும் கூறும லிருங்கள்" என்று இவருக்குப் பல்கலைக்கழக அதிகாரிகள் அறி வுறுத்தியும் கூட, "அப்படி என் கருத்தை இருட்டடிப்புச் செய்து கொண்டு நான் மானத்தோடு உயிர் வாழ முடியாது" என்று மறுப்புரை கூறி, நடுவணரசு கொடுக்க முன்வந்த இலவயத் தொகையையும், பல்கலைக்கழகம் கொடுத்துக் கொண்டிருந்த ஊதியத் தொகையையும் ஒருங்கே இழந்த இந்தப் பெரும் பேராசிரியரைப் போல் வேறொரு பேராசிரியரை, தமிழ் வரலாற்றிலேயே காண முடியாது. தாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி யேற்றப்பட வேண்டிவரும் என்று அறிந்திருந்தும், "எனக்கு வறுமை உண்டு; மனைவி மக்களும் உண்டு; அதோடு கொஞ்சம் மானமும் உண்டு" என்று உரைத்த இவர் பெருமிதத்தை என் னென்பது! வறுமையிற் செம்மையை என்னென்றெழுதுவது? காற் காசுக்குத் தமிழைக் காட்டிக் கொடுக்கும் கயவர் மலிந்த இந்நிலத்துப் பாவாணர் தப்பிப் பிறந்த ஒரு தமிழ்ப்பிறவி!

இவரின் அளப்பரிய தமிழாற்றலை முழுவதும் தமிழகம் பயன் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவர் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்தைந்து. இன்னும் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற் பட்ட நூல்கள் இவரால் எழுதப்பட வேண்டியிருக்கின்றன. அவை அத்தனை நூற்களும் தமிழ் மொழிக்கு ஏற்றம் உரைப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. இவர் எழுதவிருக்கும் செந்தமிழ்ச் சொற் பிறப்பியலகரமுதலி இவர் ஒருவராலேயே எழுத வியலும் அரும்பெரும் நூல் ஆகும். பல்கலைக்கழகக் காசுகளைக் கைநிறைய வாங்கிக் கணக்கிட்டுக் கொண்டு இன்று தமிழகத்தில் உள்ள அத்தனைப் பேராசிரியர்களும் ஒன்று சேர்ந்தாலும் எழுத வியலாத அவ்வகர முதலி தமிழுக்கே அழியாத சொத்தாகும். தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக்காக்கும் அரிய ஒளிஞாயிறும். எத்தனை எத்தனை வகைகளுக்கோ தமிழ் என்னும் பெயரால் இன்று பெருந் தொகை பல்கலைக் கழகங்களாலும் அரசாலும் செலவிடப்பெற்று வருகின்றது. இப்பெருந் தொகையுள் ஒரு சிறு அளவு தொகையை



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: சந

மெய்யெனக் கொள்ளினுங் கொள்ளுக; பேதை
வெய்தீர் முயக்கென் றிகழினும் இகழ்க;
எதிர்ப்படு ஞான்றும் விழிமுகங் கவிழ்ந்த;
வதிந்த காலும் நாணுறக் குனிந்த;
இனைத்துங் காண்டிலை அம்ம, ஏர்ந்தே
பணையார்ந்த நெடுந்தோள் பதிய
எனையூர்ந்த காலைக்கு எழிலிருந்த வாறே!

பொழிப்புரை : உண்மையென்று கருதிக் கொண்டாலும் கொள்ளுக; அல்லது (பொய் என்று கருதிக்கொண்டாலும் கொள்ளுக;) பேதைப் பெண்ணாகிய எனது உடல் வெப்பம் தீரும்படியாக (அவனுடன் நினைவின்றி முயங்கிக் கிடந்த) முயக்கம் என்று கருதி இகழ்ந்தாலும் இகழ்க. அவனை நேருக்கு நேராக எதிரில் கண்டு காதலித்த பொழுதும் நாணத்தால் விழிகளும் முகமும் கவிழ்ந்து கொண்டன. அவனுடன் மணங்கொண்டு வாழ்கின்ற இப்பொழுதும்

முன்பக்கத் தொடர்ச்சி)

இவர் முயற்சிக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும், அஃது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியை மீட்க வல்லது. மறைமலையடிகளால் தோற்றுவிக்கப் பெற்று, இவரால் பேணிக் காக்கப்பெறும் தனித்தமிழியக்கம் செழிப்படைய அடையத் தான் தமிழ்மொழி துலக்கமுற்று விளங்கும். அப்பொழுது தான் தமிழ் அறிவியல் மொழியாகவும் வாழ்வியல் மொழியாகவும் வளம் பெறும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்மொழி இலக்கணப் புலமையும், சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், உருது, இந்தி, ஆங்கிலம் முதலிய வடமொழி இலக்கணப் புலமையும் ஒருங்கே கைவரப்பெற்ற மொழியியல் ஞாயிறான இவர் தமிழகத்தை விளங்கிக் கொண்டுள்ள அளவுக்குத் தமிழகம் இவரை விளங்கிக் கொள்ளுமானால்-பயன்படுத்திக் கொள்ளுமானால் தமிழுக்கு என்றும் அழிவில்லை; தமிழினத்துக்கும் என்றும் வீழ்ச்சியில்லை; இவர் தலைமையில் அந்த நல்ல நாளை நோக்கி நாம் நடையிடுவோமாக.

(இது, 1969-ஆம் ஆண்டு, பறம்புக்குடி உ.த.க. மாநாட்டு மலரில் வெளிவந்த சிறப்பாசிரியரின் கட்டுரை. ஒரிரு திருத்தங் களுடன் இங்கு வெளியிடப் பெறுகிறது.)

அதே நாணம் மேலுற அவை குனிந்து கொள்ளுகின்றன. எனவாக, இன்றுங்கூட, நான் கண்டில்லே, அம்ம, உயர்ந்து பருத்த அழகிய நெடிய தோள்கள் (என் மார்பில் பதியும்படி) என்னைப் புணர்கின்ற காளே போலும் என் தலைவற்கு, எழில் இருந்த அவ்வகையினை.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

'நின் தலைவனது எழில் நலம் எவ்வாறு' என்று நொதுமல் தோழியொருத்தி, கற்புக் காலத்துத் தலைவியிடம் வினவுகின்றாள். அவட்குத் தலைவி இவ்வாறு விடை கூறுகின்றாள் என்பதாகும் இப்பாட்டு.

'அவன் அழகு நலன் முழுமையாக எவ்வாறிருக்கும் என்பதை, அவனொடு மணம் பொருந்தி இல்லறம் மேவிய எனக்கு இன்று வரையிலும் கூடத் தெரியாது. முன்பு அவனைக் காதலித்துக் களவொழுக்கம் கொண்டிருந்த காலை, அவனை நெருங்கிய பொழுதெல்லாம் அவன் அழகை முழுமையாகப் பார்த்துச் சுவைக்க முடியாதவாறு என் விழிகளும் முகமும் நாணத்தால் கவிழ்ந்தே யிருந்தன. திருமணம் ஆகி, உரிமையுடன் என்னைப் பொருந்தி வாழும் இன்றும் அவன் அழகைப் பருக வியலாமல் அதே நாணம் தடுக்கின்றது.'

மெய்யெனக்...கொள்ளுக: மெய்யென்று நினைத்துக் கொண்டாலும் நினைத்துக் கொள்க. ஐய உம்மையால் பொய்யென்று கருதினாலும் கருதிக் கொள் என்பது வருவித்துரைக்கப் பெற்றது. மெய் என்று முதற்கண் கூறியதால் இது மெய்யேயாம் என்று உறுதியும் உரைக்கப் பெற்றது.

மெய்—மெய் (உடல்) போலும் உண்மை. உயிர் உளதாதலை மெய்யென்று உறுதிப் படுத்துதலான் அஃது உடலுக்கும், நுண்பொருளுணர்வாகியதைப் பருப்பொருளான் உணர்த்துதலான் அஃது உண்மைக்கும் சொல்லாகியது.

பேதை: அறிவுப் பேதைமை. பருவங்குறித்ததன்று. தன் கணவனை ஏறிட்டுப் பார்க்கின்ற அறிவுத்துணிவும் கொள்ளாள்ஆகையால் பேதை எனப்பெற்றது.

வெய்தீர் முயக்கு: உடலின் காம வெப்பம் தீரும்படி தழுவுகின்ற தழுவல். தீர்தல்—தணிதல்.

இகழினும் இகழ்க: உடல் வேட்கையின் வெக்கை தணிக்கின்ற மெய்யுறு புணர்ச்சியில் அறிவு மயங்கிய பேதை என்று இகழினும் இகழ்க என்றபடி. இகழ்ச்சி உடலின் காம வெப்பம் மிகுந்தவள் என்னும் நிலையால் கூறப்பெறுவது.

எதிர்ப்படு ஞான்றும்: தலைவன் களவுக் காலத்து தன் எதிர் வந்து தோன்றிய பொழுதும்.

விழிமுகம் கவிழ்ந்த: விழியும் முகமும் (நாணத்தால்) கவிழ்ந்து கொண்டன.

வதிந்த காலும்: கற்புக் காலத்துத் திருமணம் கொண்டு வாழ்கின்ற இப்பொழுதும்.

நாணுறக் குனிந்த: நாணம் மேலுறும்படி அவை குனிந்தன.

இனைத்தும் காண்டிலே: இற்றை அளவிலும் கண்டதில்லே.

அம்ம: நொதுமலுக்குரிய பொது விளி.

நொதுமல்—உறவும் பகையுமல்லாத ஒரு தொடர்பு நிலே. முன்பே தோழி என்னும் உறவு பூண்டிருந்தால் அவளுக்குத் தலேவியின் குறிப்பு தெரியுமாகையால் இவ்வினு அவள் கேட்டிராள்; பகையெனினும் இக்கேள்வி எழற்கு இடமில்லே; ஆகையான் நொதுமல் என்று கருதி, அதன் குறிப்பாக அம்ம என்னும் பொது விளி தோன்றிய தென்க.

ஏர்ந்த—உயர்ந்த.

ஏ, ஓ உயர்ச்சி குறிக்கும் ஓரெழுத்தொரு மொழியும் முன்னெட்டு மாம். ஏணி, ஓங்கல் என்னும் சொற்களின் முன்னெட்டுகளேக் காண்க.

பணையார்ந்த:—பருமையும் அழகும் நிறைந்த.

நெடுந்தோள் பதிய: நெடிய தோள்கள் அழுந்தும்படி.

தலேவனே ஏறெடுத்தும் பாரா நிலேயில் அவன் தோளழகு கூறியது, மெய் தொட்டுப் பயின்ற உணர்வினுல் என்க.

எனையூர்ந்த காளே: என்னே மேலேறிப் புணர்ந்த காளே போன்றவன்.

எழிலிருந்தவாறு: அழகிருந்த வகையினே.

'தலேவனின் உடல் அழகையும் முக அழகையும் நேரிடையாகக் கண்டு பருக முடியாதவாறு என் நாணம் தடுத்தது. அவனே முதன் முதலாகக் கண்டு காதலித்த பொழுதும் இதற்கு வாய்ப்பில்லாமற் போயிற்று; மணந்து கொண்டு இல்லறம் பயிலும் இன்றும் அறிய வியலாமற் போனது' என்று கூறித் தன் நாண மிகுதியை உணர்த்தினுல் என்க.

இது **முல்லே** என் திணையும், கற்புக் காலத்துத் தலேவனது எழில் நலங்கேட்ட நொதுமலர்க்குத் தலேவி கூறியது என்னுந் **துறையு**மாம். o

---

அன்பர்கள் பொறுத்தருள்க!

சென்ற தென்மொழி (சுவடி 15 ஓலே 6) கூடுதலான பக்கங் களேத் தாங்கி வந்ததை ஈடுகட்ட இவ்விதழில் எட்டுப் பக்கங்கள் குறைக்கப் பெற்றன. அன்பர்கள் பொறுத்தருள்க. —அமைச்சர்.

சிலம்பிற் பிழையா?

புலவர். இறைக்குருவனார்.

பாண்டிய வேந்தன் மாண்டதன் பின்னர் அவனொடு துஞ்சிய கோப்பெருந்தேவியை நோக்கிக் கண்ணகி கூறுவதாக அமைந்துள்ள மேற்காட்டிய பாடற்பகுதியுள் முன்னர்க் கோவலனைக் கொன்ற பாண்டியன் பின்னர்த் தானே மாய்ந்தொழிந்தான் என்பதனை,

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்"

என்னும் அடிகளால் கண்ணகி சுட்டிக் காட்டுகின்றாள். பா. மாணிக்கம் அவர்கள் தம் கணக்குப்படி செவ்வாய்க்கிழமை பிற்பகலில் கோவலனுக்குக் கேடு செய்த பாண்டியன் வியாழக்கிழமை மாலை தான் கேடடைகிறான். ஆதலின், பிறனுக்குக் கேடு செய்த ஒருவன் இருநாள் கழித்துக் கேடுறுவான் என்னாது ஒருநாள் முற்பகலில் பிறனுக்குக் கேடு செய்தவன் அற்றைப் பிற்பகலே கேடடைவான் என்று பொருள் கொள்ளுமாறு மேற்காட்டிய அடிகளால் கண்ணகி கூறுகின்றமையால் நாடகம் இருநாளைக் காவு (பலி) கொண்டதாகக் கூறுகின்றார்.

பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்

என்னும் பொய்யா மொழியும்,

"நெடியது காண்கிலாய் நீயெளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகற் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்"

என்னும் முன்றுறையரையனாரின் பழமொழியும்,

"முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்"

என்னும் முதுமொழியும் தமிழறிஞர் யாவர்க்கும் தெரிந்தனவே.

முற்பகல் பிற்பகல் என்பன இயல்பாக ஒரு பகலின் முற்பகுதியையும் பிற்பகுதியையும் குறிப்பனவாயினும், ஈண்டெடுத்துக் காட்டப் பட்டவற்றுள் முற்பகல் பிற்பகல் என்பன முன்பு பின்பு என்னும் பொருளவாகக் கொள்ளற்பாலவே யன்றி ஒரு பகலின் முன்னேரம் பின்னேரம் என்று கொள்ளற்பாலவல்ல. முற்பகலில் மற்றொருவனுக்குக் கேடு செய்தான் ஒருவன் அற்றைப் பிற்பகலில் தான் கேடுறாது இருப்பானாயின் அதுபற்றித் திருவள்ளுவர் முதலாயினார் பொய்த்தனர் எனின் பொருந்துமோ?

'நேற்று நீ துன்பப்படும்போது ஓடிவந்து உதவி செய்தானே இன்று நீ அதை நினைத்துப்பார்க்க வேண்டாமா?'

'அவர்களுக்கென்ன, இன்றைக்கு அடித்துக் கொள்வார்கள் நாளைக்குக் கூடிக்கொள்வார்கள்.'

என்பன போலும் உலக வழக்குகளை உன்னிப் பார்மின்! இவற்றுள் நேற்று இன்று நாளை என்பனவெல்லாம் உண்மையில் அவ்வவற்றின் பொருளைக் குறியாது இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் அளவிலேயே பொருள்தரக் காணுகின்றனம் அல்லமோ?

அவ்வாறாயின் முன்பு பின்பு என்றாயினும் அல்லது அப்பொருளை நேரடியாகத்தரும் வேறு சொற்களாலாயினும் கூறாது முற்பகல் பிற்பகல் என்று கூறி வைத்து முன்பு பின்பு என்று கொள்ளுக என்று கூறுவது எற்றுக்கெனின், அவ்வாறு கூறுவது உறுதிப் பாட்டைக் காட்ட வந்த விரைவுக் குறிப்புப் பற்றி யென்க!

விரைவுக் குறிப்பு விரைவைக் காட்டுமே யல்லாது உறுதிப் பாட்டையும் காட்டுமென்றல் என்னையெனின் கூறுதும். ஒருவ னிடத்து ஒரு செயலை ஒப்படைக்கக் கருதும் மற்றொருவன், அவன் கடைக்கொட்கச் செய்வானோ மாட்டானோ என ஐயுற்று "நீ இதனைச் செம்மையாகச் செய்து முடித்து விடுவாயா?" என்று வினவிய வழி "இன்னும் பத்தே நாளில் முடித்துத் தருகிறேன்" எனறு வீரமாக விடையிறுக்கக் காண்டும். 'எப்பொழுது செய்து முடிப்பாய்' என்று அவன் வினவாதிருக்கையிலும் அவன் 'பத்தே நாளில்' என்று விடை கூறியது எற்றுக்கு? உறுதிப்பாட்டைக் காட்டும் பொருட்டே யன்றோ?

வினை, அதன் அளவு தகுதிகட்கேற்பத் தன்பயனை உரிய காலத்தில் விளைக்குமேயன்றி, விரைந்து விளைக்க மாட்டாது. அங்ஙனம் விளைக்குமெனின் அது வினையின் இலக்கணத்திற்கே முரணும். ஆகவே ஊழ்வினை விரைந்து வந்து பயன் விளைக்கு மெனின் அது வினை செய்தான் அதன் பயனைத் தவறாது நுகர்ந்தே தீரல் வேண்டும் என்னும் அடிப்படை உண்மையை வலியுறுத்தும் பொருட்டுக் கூறப்பட்டதாகவே கொள்ளல் வேண்டும். கொள்ளவே விரைவுக்குறிப்பு உறுதிப்பாட்டைக் காட்டுமென்பது துணியப்படும். இது நிற்க!

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்"

என்று கண்ணகியின் வாய் மொழியாக இளங்கோவடிகள் எடுத் துரைப்பது

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்"

என்னுந் திருக்குறட் கருத்தை உள்ளீடாகக் கொண்டதேயாம். தொல்லை வழக்குப் பற்றிய இதனை எடுத்துக்காட்டி, நாடகம் இரு நாளைக் காவு கொண்டதாக மாணிக்கம் அவர்கள் கூறுவது வலியற்ற தாகலின், அஃது அவர் கருத்தை வலியுறுத்துமாறு யாங்ஙனமென விடுக்க!

(தொடரும்)

நூல்: **மார்க்சிய இயங்கியல்**

ஆசிரியர்: **குணா**

பதிப்பு: **பொதுமை வெளியீடு.** பெங்களூர்-42.

விலை: **உருபா 12/- பக்கம்: 320.**

மார்க்கிய இயங்கியலை (**Marxist Dialectics**) நல்ல தமிழில் தரவேண்டும் என்னும் அன்பர் குணாவின் முயற்சி இந்நூல் வாயிலாக முழுமையாக வெற்றி பெற்றுள்ளது. மார்க்கியம் - இலெனினியம் – மாசேதுங் சிந்தனை ஆகிய மெய்யியல் கருத்துகளை விளக்குவது எளிய செயலன்று. அதுவும் தனித்தமிழில் விளக்கப் புகுவார் அரியர். இவ்வரிய பணியை ஏற்று எளிய இனிய தனித்தமிழ் நடையில் நூலைத் தமிழுலகிற்குப் படைத்துத் தந்துள்ள நூலாசிரியரை எத்துணைப் பாராட்டினும் தகும்.

தமிழாக்கம் செய்வதற்கு நிரடான ஆங்கிலச் சொற்களையும் மிகப் பொருத்தமாகத் தமிழாக்கியிருக்கிறார் என்பதற்குப் பின்வரும் சொற்களைச் சான்றாகக் காட்டலாம்.

Isotope—ஓரகத்தனிமம். – **Irritability**—உறுத்துணர்வு.
Monobasic fatty acid—ஓரடி நிணத்தீநீர், – **Neutron**—நடுமம்.
Terror cult அரட்டல் வழிபாடு. - **Variable**—மாறுதிணை.

ஆயின், **Vulgar, Trite** போன்ற இரு சொற்களுக்கும் '**கொச்சை**' என்னும் ஒரே தமிழ்ச்சொல்லை ஆள்கிறார், வெவ்வேறு சொற்களை ஆண்டிருக்கலாம். இசுடாலினை '**தாலின்**' எனத் தமிழ்ப்படுத்தியிருக்கலாம். பொருள் முதலியலார் கருத்து முதலியலார் ஆகியோரின் கோட்பாடுகளை அழகாக விளக்குகிறார். இலக்கிய மேற்கோளும் காட்டுகிறார்.

தமிழுலகம் இவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. சமற்கிருதச் சொற்கள் விரவாமல் வெளிவரும் முதற்பொதுவுடைமை நூல் என்று இதனைப் போற்றலாம்.

கல்லூரிகளில் பாட நூலாக வைக்கத்தக்க சிறப்புடையதாகவும் கற்பாரைக் கருத்துலகில் ஆழ்த்தும் விருப்புடையதாகவும் விளங்குகிறது. இது மார்க்கியத்தை அறிய விரும்பும் அனைவருக்கும் ஓர் அரும்பொருட் பெட்டகம்: தமிழ்த்தாய்க்கு ஓர் உயரிய அணிகலன்; தமிழர்க்கு ஓர் ஒளி விளக்கு; தமிழால் முடியுமா என்பவர்க்கு ஓர் அறைகூவல்; நூலகங்களில் **தவறாமல்** இடம்பெற வேண்டிய கருவூலம்.

—இரா. மதிவாணன். க.மு.

நூல்: **பெரியார் புகழ்**
ஆசிரியர்: **புலவர். தி. நா. அறிவொளி. க.மு.**
வெளியீடு: **தி. ஞா. தொல்காப்பியன், மந்தைவெளித் தெரு, நால்வர் பேட்டை, திருக்கழுக்குன்றம்-603109.**
விலை: **உருவா 2-00.**

பெரியார் தம் புகழைப் புனைந்துரைப்பனவான, நூறு தலைப்புகளைக்கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களால் ஆகியது இந்நூல். பாக்களும் பாவினங்களும் இசைப்பாக்களும் விரவ அமைந்துள்ள இஃது ஒரு புதுவகைக் கலம்பகம் எனலாம். பாக்கள் அனைத்தும் தொடை நலஞ் சிறந்து விளங்குகின்றன.

பாவின் சிறப்புக்கு இயல்பு நவிற்சியாக புனையப்பட்டுள்ள பின்வரும் பாடலைச் சோற்றுப்பத வழக்காகச் சொல்லலாம்.

சித்திரப்பூம் பேச்சினிலே சிரிப்பலைகள் துள்ளும்
சீர்தூக்கும் புத்தெண்ணச் செழுஞ்சுடர்கள் மின்னும்
முத்திரைச்சொல் 'வெங்காயம்' முழுச்சிரிப்பை யுள்ளும்
முரணில்லா மூதறிவில் முன்னேற்றம் வெல்லும்
நத்துகின்ற மேற்கோள்கள் நகைக்கதைகள் அள்ளும்
நயங்கனிந்த கவர்ச்சிநடைக் காந்தமென ஈர்க்கும்
பித்தரெனப் பேயரெனப் பிறழ்ந்திருந்த மாந்தர்
பெருமையுறப் பெருந்தொண்டால் பெரியாரே வென்றார்!

தன்னேரில்லாத் தனித்தலைவர் (10) என்னும் பாவின் கீழுள்ள வெண்பா பிரிவுபடுத்தப் படாததாகவும், சால்புப் பெரியார் (12) என்னும் வெண்பா ஓசையானன்றி வடிவான் அறிய முடியாததாகவும், அமைந்துள்ளன. பிறவிடங்களிலெல்லாம் லகர ஐகாரத்திற்கு 'லை' என்னும் திருந்திய வரி வடிவே கையாளப் பட்டிருப்பக் 'கலைச் சோலை' (49) என்னுந் தலைப்பில் உறழ்ச்சியாய் அமைந்திருப்பது அச்சகக் குறைபாட்டாற் போலும்! 'கலைவளம்' (59) என்பதும் அத்தகையதே.

இச்சை (5) பேதம் (52) இமயம் (77) முதலிய பல பிறமொழிச் சொற்களும், **ஸ், ஜோ, ஜ்** கிரந்த வரிவடிவங்களுள், எம்.ஏ. பி.டி. (முன்னுரை) ஆகிய தமிழ் வரி வடிவங்கொண்ட ஆங்கிலச்சொல் முன்னெழுத்துகளும் கையாளப்பட்டிருப்பதை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம்.

நிறைப்புகழ் (தமிழ் வாழ்த்து) என வினைத்தொகை வலியுற்றிருப்பது ஓசைநலங் கருதிப் போலும்! 'கூத்துகள் தானே (8) நிகழ்ச்சிகள் தகையாது (83) பெரியார் தந்தையன்றோ (99) முதலிய பால்வழுக்களும் ஆங்காங்குக் கருக்களிக்கின்றன.

ம:231: **குடியிருப்புக்குக் 'காலனி'**

என்னுஞ்சொல் பொருந்துமா?

ஐயா, தமிழகத்தில் பெரும்பாலும் அரசினராலோ, அன்றித் தனியாராலோ அமைக்கப்படுகின்ற குடியிருப்புகள் யாவற்றுக்கும், பெயர்கள் வைக்கப் பெறுகின்றன. ஆனால் குடியிருப்பவர்களை நிறுவியவர்கள் அவற்றிற்குப் பெயரிடுங்கால் தலைவர்கள், **அறிஞர்கள்** சிலரின் பெயர்களில் ஏதோ ஒரு பெயரைக் கூறிப் பின் குடியிருப்பு என எழுதுகின்றனர். எடுத்துக்காட்டாக "நெடுஞ்செழியன் குடியிருப்பு"- என்று சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இருப்பது போல்! அதை ஆங்கிலத்தில் எழுதுங்கால் "Neduncheziyan Colony"—என்று எழுதுகின்றனர்.

(முன்பக்கத்தொடர்ச்சி)

மேற்காண்பனவும் பிறவுமான பிழைகள் தவிர்க்கப்பட்டுப் பெரும்பாலும் சொன்ன செய்திகளே திரும்பத் திரும்ப இடம்பெறுமலும் இருந்திருப்பின் நூலின் தரம் மேலும் சிறந்திருக்கும். பெரியார் நூற்றாண்டு விழா நிகழும் இக்கால் 'பெரியார் புகழ் 100' என்னும் இந்நூல் வெளி வந்திருப்பது வரவேற்கத் தக்கது. **—இறை.**

நூல்: **வீரசைவத்தில் நீங்கள் ஏன் சேரக்கூடாது.**

ஆசிரியர்: **வீரசைவத் தவத்திரு காசிவாசி—நடேசனார்.**

கிடைக்குமிடம்: **சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், 3, மண்டப வீதி, ஈரோடு-638001.**

விலை: **40 காசுகள்.**

வீரச் சிவனியத்தின் வரலாறு இதன்கண் சுருக்கமாகப் பதிப்பாளர் திரு. வேலா. அரசமாணிக்கம் அவர்களால்வரையப்பட்டுள்ளது. 'தமிழ்நாட்டில் வீரசைவம்' என்னும் தலைப்பில் அவர் வரைந்துள்ள கட்டுரை பிற்சேர்க்கையாக இணைக்கப் பட்டுள்ளது.

வீரச்சிவனியத்தின் கொள்கைகள், நடைமுறைகள், அவற்றைக் கடைப்பிடித்தலால் உண்டாகும் சிறப்பு, அவை அனைவரும் கடைப்பிடிக்கத்தக்க முறையில் அமைந்திருக்கும் பாங்கு முதலியவற்றை இந்நூலாசிரியர் சுருக்கமாக வரைந்துள்ளார். வீரச்சிவனியத்தை அறிந்து கொள்ளவும் கடைப்பிடிக்கவும் விரும்புவார்க்கு இது பயன் படும். **—முருகவேள்.**

Colony-என்ற சொல்லுக்குப் பொருள் கூறுவோமானுல் ஒரு நாட்டிலிருந்து மற்ருெரு நாட்டிற்குச் சென்று குடியேறிய, மக்களுக்கு- அந்நாட்டில் போதிய வாய்ப்பு செய்து கட்டிக் கொடுக்கப்பெறும் குடியிருப்பகமே-Colory-என ஆங்கிலத்தில் அழைக்கப் பெறுகின்றது. சான்ருக, இங்கிலாந்து நாட்டினின்று அமெரிக்க நாட்டிற்குச் சென்று குடியேறும் ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்து அரசால் தனிப்பட்ட குடியிருப்பகங்கள் கட்டிக் கொடுக்கப் பெறுகின்றன. இங்ஙனம் கட்டிக் கொடுத்த குடியிருப்பகங்களுக்கு "English Colony"-என்றும் வேறு சில பெயர்களையும் வைத்து அழைக்கின்றனர்.

—ஆனுல் நம் தமிழகத்தில் தமிழ்க் குடிமக்கள்-பழந்திராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் இடங்களுக்குக் 'காலனி' (Colony) என்று கூறுவது பொருந்தாது. அங்ஙனம் நாம் அழைத்தால் அம்மக்கள்-அப்பழந்தமிழ் மக்கள் எந்நிலத்திலிருந்து வந்தவர்கள், அன்றி எந்த அரசால் காப்பாற்றப் படுகின்றவர்கள்-என்றெல்லாம் ஐயம் ஏற்படும் ஆகையால் அருள் கூர்ந்து தமிழக அரசு இந்தக் 'காலனி' என்னும் சொல்லைத் தவிர்க்கும் என நினைக்கிறேன்.

—**மா. பொழிலன்**. சென்னை-5.

ம:232: தோழர் தா. பாண்டியனும், இந்தி எதிர்ப்பும்!

ஐயா, இன்று இந்தியாவில் நடந்துவரும் மக்களாட்சிக்கும், அன்று நடந்த வெள்ளையர் ஆட்சிக்கும் ஒரு தமிழன் என்ற முறையில் என்னுல் வேறுபாடு ஏதும் காணமுடியவில்லை. (சொல்லப் போனுல் அன்றைய தமிழனின் நிலையை விட மிகவும் இழிவானதுதான் இன்றைய நிலை) இரண்டு, மூன்று நூற்ருண்டுகள் வெள்ளையன் ஆண்டதால், ஆங்கிலம் பயின்ருேம், மேலை நாகரிகங்களைக் கைக் கொண்டோம், அறிவியல் முன்னேற்றங்களை உணர்ந்தோம். ஆனுல் இன்ருே அதைவிடக் கீழான நிலையில் இருக்கிருேம். அதற்குக் காரணம் இங்குள்ள இரட்டை ஆட்சி முறையேயாகும்.

இன்று மானமிழந்த முழு அடிமையாகவும் வாழ முடியவில்லை; மானமுள்ள தமிழனுகவும் வாழ முடியவில்லை. அன்று நாம் ஆங்கிலம் கற்ருேம். அதனுல் அன்றும் இன்றும் இனி என்றும் நமக்கு உலகளாவிய பயன் உண்டு. அஃதாவது அன்று நாம் அடிமையானதால் கிட்டிய பயன் இது.

இன்று (இல்லாவிட்டாலும், இனி என்ருே ஒரு நாள்) நாம் இந்தி படித்தே ஆக வேண்டும். ஆனுல் இந்தியினுல் நாம் அடையப் போவதென்பது, தலையின் இழிந்த மயிர்ப் பயனும் அன்று. (இந்தி **எதிர்ப்பு** என்பதெல்லாம் வெற்று ஆரவாப் பேச்சேயாகும்). "இந்தியனுயும் இருப்பேன்; இந்தியும் படிக்க மாட்டேன்" என்பது, காதில் பூ சுற்றிக் கொள்பவனிடம் கூற வேண்டிய ஒன்ருகும்.

ஏனெனில் அவன்தான் இக்கூற்றை நம்புவான்! ஓர் இனத்திற்கு ஒரு மொழி தான் இருக்கமுடியும். அதைத்தான் அவர்கள் (வடவர்கள்) கூறுகிருர்கள். அவர்கள் மீது தவறென்றுமில்லே. இதைப் புரிந்து கொண்டு விட்டால் இந்தி பயில்வதைப் பற்றிய முடிவில் சிக்கலேதும் இருக்க முடியாது. இந்தியனுக இருப்பதால், தமிழனுக்கு எவ்வெவ் வகைகளில் இழப்பு என்பதைத் துறை வரிசையில் பட்டியல் போட்டுக் காட்டலாம்.

ஆகையால், தோழர் தா. பாண்டியனும், அவரை ஒத்த எண்ண முடைய அவருடைய பொதுவுடைமைக் கட்சியரும், தாம் இந்தியரா அல்லரா என்பதை முதலில் தெளிவு செய்து கொள்வதோடு, தமது கட்சியின் பெயரும் "**இந்தியப்** பொதுவுடைமைக் கட்சி" **(Communist party of India)** என்று தான் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கட்டும்.

—தென்மொழியன்பன். **இரெ. பரமானந்தம்**. தஞ்சை-1.

ம:232: தமிழினத் தாழ்வுக்குக் கரணியமாவது எது?

கழிந்த நான்கைந்து ஆண்டுகளாக, நிலவி வரும் சில நிகழ்ச்சிகளே காணும்பொழுது இது தமிழ் நாடா? அல்லது வட நாடா என்ற ஐயப்பாடு தோன்ருமலிருப்பதில்லே. எழுத்தறிவு நிரம்பப்பெற்ற தமிழ்நாட்டிலா இந்நிலே என்று எண்ணுகையில் நெஞ்சம் நீராய் உருகுகிறது. மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் எத்துணே அளவிற்குத் தமிழினத்திற்கு அழிவு சூழ்ந்துள்ளது என்று நினைத்துப் பார்ப்பவர்கள் யாரேனும் இருக்கிருர்களாவென்ருல் அவர் களுள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் ஒரு சிலரே. நெருக்கடி நிலேயில் மீண்டும் விதைக்கப்பட்ட ஆரிய நச்சுவிதை, இன்றைய சூழலில் மரமாக வளர்ந்து வருகிறது. இதற்கெல்லாம் யார் கரணிய மாவார்கள் என்ருல் நம்முடைய சூத்திரத் தமிழர்கள்தாம்.

உலக மதங்களின் மாநாடு மதுரையில் நடைபெற்றது! சென்னேயில் நடைபெற்றது! இந்துமதத் தலேவர்களும் அவர்தம் அடிவருடி கருங்காலிகளும் கலந்து கொண்டார்கள். இந்நாடு, "சுபிட்ஸமாகவும்" "பரஸ்பரமாகவும்" "சௌஜன்யமாகவும்" வாழ வழி வகைகளேயெல்லாம் எடுத்துக் கூறினுர்கள். ஆரியப் பதடிகளின் பிதற்றல்களில் இதுவும் ஒன்ருகும்.

இந்நிலேயில் தமிழன் என்று மார் தட்டிக்கொண்டு, ஆரிய னுக்குத் தங்களே அடிமைபடுத்திக் கொண்டு ஐந்தாம் படை வேலே செய்யும் சில புல்லுருவிகள், அடிவருடிகள், கருங்காலிகள் தங்களுக் குள்ள அடிமையுணர்வை மாநாடுகள் மூலம் அண்மைக் காலந் தொட்டு உணர்த்தி வருகிருர்கள் என்பதை நம்மவர்கள் அறிந்ததே!

"ஜைனர்கள் மாநாடு" "ஜைனர்கள் இளைஞர் மன்றம்" "வீரசைவ கன்னடர்கள் மாநாடு" "சௌராஷ்டிரர்கள் மாநாடு" "துளுவ வேளாளர்கள் மாநாடு" "இசை வேளாளர்கள் மாநாடு" "மருத்துவ குல மாநாடு" "செங்குந்தர்கள் மாநாடு" "அகமுடியர்கள் மாநாடு" "கருணிகர்கள் மாநாடு" குலாலர் (குயவர்கள்) மாநாடு, "சலவைத் தொழிலாளர் மாநாடு" "வன்னிய குல க்ஷத்திரியர்கள் மாநாடு" "ஆதி திராவிட மாநாடு" "தாழ்த்தப்பட்டவர்கள் மாநில மாநாடு" "நாட்டுக் கோட்டை நகரத்தார் மாநாடு" "யாதவர்கள் மாநாடு" "கிறித்துவ இசுலாமிய மாநாடு" மற்றும் "மூப்பதேவர்கள் மாநாடு" "விசுவ பிராம்ணுள் மாநாடு" இன்னும் எத்தனையோ மாநாடுகள் நடந்த வண்ணமிருக்கின்றன. தங்கள் தங்கள் சாதிகள் உயர வேண்டும், அரசாங்கத் துறைகளில் வேலை வாய்ப்புகளை அதிகமாகக் கொடுக்க வேண்டும், என்றெல்லாம் அமைச்சரவையில் இடம் கேட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். அண்மையில் வேலை மாநகரில், தனபாக்கியம் கிருட்டிணசாமி பெண்கள் கல்லூரியில், செங்குந்தர்கள் மாநாட்டைத் (துளுவ வேளாளர் என்று படித்ததாக நினைவு) தொடக்கி வைத்துப் பேசுகையில், சட்ட அமைச்சர் திரு. நாராயணசாமி (முதலியார்) அவர்கள், முதலியார் இனத்திற்கு அரும்பாடு பட்ட காலஞ்சென்ற முதலமைச்சர் அண்ணாதுரைக்கு நன்றி செலுத்தி, முதலியார் இனம் மேலும் மேலும் உயருவதற்கு அயராது பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இவ்வாறு அவரவர்களாகவே தங்களைச் சூத்திரன், ஆரியப் பதடிகளுக்கு ஐந்தாம்படை வேலை செய்பவர்கள் என்று பறை சாற்றிக் கொண்டால், "**தமிழன்**" யார்? இம்மாநாடுகளில், தலைமை தாங்குபவர்கள் சுப்பிரமணியன்களும், மார்க்க பந்துகளும், ராமசாமிகளும், நாராயணசாமிகளும் ஆகிய படித்த அதி மேதாவிகள் தாம்!

அமைச்சர் ஒருவர் கோவையில் பேசுகிறபோது நமது முதலமைச்சர் அவர்கள் கவுண்டர் இனத்தைச் சார்ந்தவர் என்றார். இல்லை இல்லை அவர் மன்றாடியார் என்றார். யார் என்னென்ன சாதி என்பன போன்றவற்றை பேசுவதற்காகத்தான் அமைச்சர்கள் இருக்கிறார்கள் போலும்! மு. வ. போன்ற தமிழ் அறிஞர்கள் ஏட்டில் எழுதி வைத்தார்களே தவிர தாங்கள் சொந்த வாழ்க்கையில் கடைபிடிக்கவில்லை என்பதும் நமக்குத் தெரிந்ததே! கவுண்டன் என்றால் சூத்திரன். அவன் வயலில் தான் வேலை செய்ய வேண்டும் என்று பறை சாற்றிய இராசாசி நினைவுக் குழுவின் தலைவர் நம்ம சூத்திர சுப்பிரமணியம் தான்! "அர்த்தமுள்ள இந்துமத"த்தை எழுதிக் குற்றேவல் புரியும் விபீடணக் கண்ணதாசன்களும் சூத்திரன்கள் என்பதை மறந்துவிடுதல் கூடாது. இவ்வாறு தங்களைத்தாமே அடிமை படுத்திக் கொண்டால் தமிழன் யார்?

இந்த இழி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தினமணிச் சிவராமனும், குமுதமும், ஆனந்தவிகடனும் சேர்ந்துகொண்டு "சாதி

'கருநாடகம்'

—பழங்குடி.

"குமரிக்கண்டமே மாந்தன் பிறந்தகம். தமிழ்மொழி திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும். சமற்கிருதம் பேசப்பட்ட ஒரு மொழியன்று. அஃது ஓர் அரைச் செயற்கை இலக்கிய நடைமொழி; பண்ணப்பட்ட பாவையைப் போன்றது. தமிழ் வடக்கே திரிந்து திரவிடமானது. மேலும், வடக்கே போய் வடதிரவிடம் பிராகிருதமானது. பிராகிருதம் என்ற வடதிரவிட வட்டார மொழிகளிலிருந்தும், தமிழில் இருந்தும் செய்யப்பட்ட மொழியே சமற்கிருதம்." என்று பல காலமாகப் பாவாணர் சொல்லி வந்த கருத்துகளுக்குச் சான்றுகள் நாளும் பல்கி வருகின்றன.

'மகாராட்டிரத்திற்கு முன்பிருந்த பெயர் 'கருநாடு' என்பது. கருநாடு என்றால் பெரியநாடு என்று பொருள். கன்னடத்திலும் கரு-பெரிய என்று பொருள் படுகிறது. கருநாடு என்பதைச் சமற்கிருதத்தில் மகாராட்டிரம் என்று மொழி பெயர்த்துக் கொண்டனர். கல் + நாடு (குன்றுகள் மிகுந்தநாடு) என்பது கன்னடு-கன்னட நாடாயிற்று. மராத்தி தனிமொழி ஆவதற்கு முன்பு கன்னடநாடும் மகாராட்டிரமும் கருநாடு என்னும் ஒரே பொதுப் பெயரால் அழைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் இச்சொல்லே 'கர்னடக்' என வழங்கியது' என்பர், 'தமிழ் வளர்ச்சி' நூலாசிரியர் மதிவாணனர்.

'இடைக்காலத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டிரம், கூர்ச்சரம் (குசராத்தி) ஆகிய ஐந்தும், ஆரியராலேயே பஞ்ச திராவிடம் எனப்பட்டன' என்பார் பாவாணர் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' என்னும் நூலில்.

(முன்பக்கத்தொடர்ச்சி)

இந்துக்களுக்கும் அரிசனங்களுக்கும்" சண்டை என்று எழுதியும் பேசியும் வருவது நம்மவர் அறிந்ததே. மரண அடி வாங்கியும், பார்ப்பனர்கள் எவ்வாறு தமிழனைப் பிரிக்கிறார்கள்!

எனவே நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளுகிறோம்! இந்த இழிநிலை நம்மை விட்டு என்று ஒழிகிறதோ அன்றுதான் நம்மிடையே **தமிழன்** என்ற ஒருணர்வு தோன்றும். மற்றபடி கட்சி மேடைப் பேச்சுகள் அனைத்தும் அரசியல் ஊதியம் தேடுவதே! இல்லையெனில் மாவோ சொன்னது போல் துப்பாக்கி முனையில் இருந்துதான் அதிகாரம் பிறக்கிறது "Power grows out of the barrel of the gun" என்று கூறிய பொன்மொழியை நிறைவேற்றினால் எல்லாரும் சரி நிகராகி விடுவார்கள். தமிழால் மாநாடு கண்ட தமிழகம், சாதியால் மாநாடு காண்கிறது. இந்தக் கொடிய நிலை நீடிக்குமாயின், தமிழர்கள் சிதைந்து போவது உறுதி!

—தங்களன்புள்ள **மு. செந்நாகன். க.மு.** சென்னை-1.

மேற்கண்ட பாவாணர், மதிவாணர் கருத்துகட்கு அரண் அளிக்கும் வகையில் அண்மையில் 'அமுதசுரபி' என்னும் இதழில் ஒரு கட்டுரை வந்துள்ளது. 'தமிழ்மொழிக் குடும்பத்தில்' என்ற அக்கட்டுரையை எழுதியவர் கா. சிரி. சிரி ஆவார். இவர் மராட்டியத்தின் புகழ்மிக்க எழுத்தாளரான கண்டேகரின் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர். அக்கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு.

"....இப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மராட்டி தமிழுடன் இணைந்து வந்துள்ளது. இன்றைய மொழி ஆராய்ச்சியாளர், 'மராட்டி மொழி ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தது' என்று எழுதி வந்த போதிலும், இந்திய நாட்டின் மொழி ஒற்றுமைகளைப் பயின்று அறியாமல், 'ஆராய்ச்சி' என்ற பெயரால் தவறான பல செய்திகளைப் பாடமாக்கி வைத்திருந்த போதிலும்-பொது மக்கள் வளர்ந்து இணைந்த மொழி ஒற்றுமைகளின் உண்மையைப் புறக்கணிக்க இயலாது."

"அப்பா, ஆய், தாய், அண்ணா, அக்கா, அத்தை, மாமா, மாமி முதலிய உறவுச் சொற்களேயன்றி வினைச் சொற்களும் தமிழிலும் மாரட்டிலும் ஆயிரக்கணக்கில் சமமாக இருப்பதை உற்று நோக்க வேண்டும். 'பஞ்சதிராவிடத்தில் மராட்டி ஒன்று என்று வாயாளவில் சொல்லி வந்த போதிலும், 'மராட்டி திராவிட மொழியினத்தைச் சேர்ந்தது' என்பதற்கான முழு ஆராய்ச்சி நடைபெறாதது வருந்தத்தக்கது. அண்மையில் இதற்கான முயற்சிகள் பிறந்துள்ளன. வரலாறு காணாத பழங்காலத்தில் தமிழ்மொழியே இன்றைய மராட்டிய மாநிலத்தில் வழங்கிவந்தது."

–என்பதற்கான நிறையச் சான்றுகளை முதன் முறையாகக் கண்டு பிடித்து, **'திராவிட மகாராட்டிரர்'** என்ற ஆய்வுநூலை மராட்டியில் எழுதி வெளியிட்டிருக்கிறார், என் அருமை நண்பர் **திருவிச்வநாத கைரே.** தொழிலினால் இவர் புகழும் வளமும் பெற்ற பொறியாளராக இருந்தும் தமிழ்-மராட்டி இணைப்புக்கு ஆர்வத்துடன் அருமையான தொண்டு செய்து வருகிறார்.

"பழங்குடி மக்களிடையே வழங்கும் கதைகள், பழக்கங்கள், மொழியியல், நிலநூல், நிலத்திணை நூல், வரலாறு (இன்னும் ஊர்ப் பெயர்கள், ஆறுகளின் பெயர்கள்) முதலிய சான்றுகளைக் கொண்டு, 'நாலாயிரம் ஆண்டுகளாகவே தமிழ்மொழியும், தமிழ்ப்பண்பாடும் மராட்டிய மாநிலத்தில் நிலைத்து வந்துள்ளன' என்றும், **'தமிழ்க் குடும்பத்தில் கலந்தது** மராட்டி' என்றும் நிறுவியிருக்கிறார். தமிழில் காணும் ஐந்திணை மக்களே வேதம் குறிக்கும் 'பஞ்சசனர்' என்பது இவரது கொள்கை". (இந்திய வரலாற்றைத் தமிழகத்தினின்று தொடங்கிய வரலாற்றறிஞர் பி. டி. சீயின் கொள்கையும் இதுவே என்பது நாமறிந்ததே)" 0

எதை எப்படிக் கற்பது?

உயிர்ப்பு: **சான் இரசுகின் (John Ruskin)**
பெயர்ப்பு: **கா. வில்லவன்**

நம்மில் பலர் கல்வியின் உண்மையான நோக்கம் என்னவென்றே அறியாமல் இருக்கின்றார்கள். கல்வியால் நாம் பெற வேண்டிய உண்மைப்பயன் என்னவென்பதையும் விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்றார்கள். தம் பிள்ளைகளைப்பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்கச் செய்யும் பெற்றோர்களுள் பலர், கல்வியின் உண்மையான நோக்கம் பயன் என்னவென்பதை விளங்கிக் கொள்ளாமல் இருப்பதோடு, கல்வியைப் பற்றித் தவறான கருத்துகளைக் கொண்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதொரு நிலையாகும். குறிப்பாகத் தாய்மார்களுள் பலர், கல்வியைப் பற்றிய மேம்போக்கான அறிவின் துணை கொண்டு ஆய்ந்து பார்க்காத தவறான கருத்துகளுக்கும் எண்ணங்களுக்கும் இரையாகிக் கிடக்கின்றார்கள்.

அவர்கள், "வாழ்வில் ஏதேனும் ஓர் உயர்நிலையை எட்டிப் பிடிப்பதற்குத் துணை செய்யவல்ல ஒரு கருவியே கல்வி!" என்று கருதுகின்றார்கள். பெற்றோர்களுள் பலர், தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி அளிக்கப் படுகின்றதா? என்பதை எண்ணிப்பார்ப்பதேயில்லை.

இப்பொழுது அளிக்கப்படுகின்ற கல்வியானது, தங்கள் பிள்ளைகள் தங்களுக்குரிய வாழ்வை விளங்கிக் கொள்ளவும், பின்னாளில் தங்களின் வாழ்வைத் தாங்களே திருத்தி அமைத்துக் கொண்டு செப்பமாக வாழ்வதற்கும் ஏற்றதாக உள்ளதா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப் பட்டுக் கொள்வதில்லை. மாறாக, "தம்பிள்ளை ஓர் உயர் பதவியை எட்டிப் பிடிக்க வேண்டும். அழகாக உடுத்திக் கொண்டு, பகட்டாக இருக்கையில் அமர்ந்து கொண்டு, அதிகாரச் செருக்கோடு அலுவலகத்தில் தனக்குக் கீழ் உள்ளவர்களை உருட்டி மிரட்டி மேய்க்க வேண்டும். வளமனை கட்டிக் கொள்ள வேண்டும். அங்கே அனைத்து ஏந்துகளோடும் இன்பமாய் வாழவேண்டும்? இவற்றிற்குத்துணை செய்யவல்ல கல்வி அளித்தால் போதும்" என்ற அளவிலே மன நிறைவடைந்து விடுபவர்களாகத்தான் உள்ளார்கள்.

இஃது எவ்வாறெனில், இயல்பான வளர்ச்சியில் தங்கள் பிள்ளைகளின் கண் பார்வை சிறந்து விளங்க வேண்டுமென விரும்பாமல், கண்பார்வையில் குறைபாடு ஏற்பட்டாலும், பார்வைக் கோளாறுக்கு அணிந்து கொள்ள ஒரு கண்ணாடி கிடைத்தால் போதும் என்று விரும்புவது போன்றதாகும்.

இவர்கள் வாழ்வின் உண்மையான மேம்பாடு (Advancement in life) என்னவென்பதையே விளங்கிக் கொள்ளாமல் இருப்பதினால் தான் இத்தகைய தவறான கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள்.

இக்காலக் கருத்துப்படி, வாழ்வின் மேம்பாடு என்பது பலரும் அறியும்படியான ஒரு நிலையை (Becoming Conspicious in life) அடைவது என்று கருதப்படுகிறது. அஃதாவது மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்று, மதிப்புச் செலுத்தும் படியான ஒரு பெரும் நிலையை அடைவது என்று விளக்கப்படுகிறது.

ஒருவன் தன் வாழ்நாளில் பெருஞ்செல்வத்தைக் குவிக்கின்றான். ஈட்டிய அச்செல்வமே தன் வாழ்வின் மேம்பாடாக அவனுக்குத் தோன்றுவதில்லை. மாறாக, தான் ஈட்டிய செல்வத்தைப் பிறர் அறிந்து போற்றிப் புகழ்வதுதான் தன் வாழ்வின் மேம்பாடு என்று கருதுகின்றான். ஒருவன் ஒரு பெரும் பணியைச் செய்து முடிக்கின்றான். அந்த அளவிலே அவன் மனம் நிறைவுறுவதில்லை. தான் செய்து முடித்த அப்பணியைப் பிறர் அறிந்து போற்ற வேண்டுமென உள்ளார்ந்து விரும்புகின்றான். அவ்வாறு போற்றிப் புகழ்வதுதான் தன் வாழ்வின் மேம்பாடு என்று கருதுகின்றான். இதை இன்னுஞ் சுருங்கச் சொன்னால், "தங்களுக்குள்ள புகழ் அங்காப்பு (Thirst for applause) நிறைவுறுதலே தம் வாழ்வின் மேம்பாடாக ஒவ்வொருவனும் கருதுகின்றான்"

மாந்த இனம் இதுவரை தான் மேற்கொண்டுள்ள பல அரும் பெரும் முயற்சிகளுக்கும், செய்து முடித்துள்ள பல அரிய செயல்களுக்கும் இப்புகழ் அங்காப்பே மூல ஊக்கியாய் இருந்திருக்கிறது. அவ்வாறே மாந்த இனத்திற்கு ஏற்பட்டுள்ள பல கேடுகளுக்கும், வீழ்ச்சிகட்கும் இதுவே மூலகாரணியமாய் இருந்திருப்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாந்தர் எல்லோருக்கும் இப்புகழ் விருப்பு உள்ளது. ஆனால் ஒருவர்க்கொருவர் வேறுபட்ட அளவில் உள்ளது. உண்மையை நாடும் உயர்ந்த உள்ளங்களில் இப்புகழ் விருப்பு ஒரு சிறு தீப்பொறி போல் எங்கோ ஒரு மூலையில் உள்ளது. பொய்ம்மையில் மூழ்கிக் கிடக்கும் மெலிந்த உள்ளங்களில் காட்டுத்தீப் போல் விரவிக் கிடந்து அவர்களை வன்மையாக உந்துகிறது.

மாந்தனுக்கு இப்புகழ் வேட்கை வேண்டுமா வேண்டாவா என்பதைப் பற்றி இங்கே யான் தருக்க மிடவில்லை. தன்னை வெளிப்படுத்திக் காட்டி, அதன் மூலம் புகழ்பெற விரும்பும் ஆவலே gratification of vanity) மாந்தனின் ஒவ்வொரு செயலுக்கும் உழைப்பிற்கும் மூலமாய் இருக்கின்றது என்பதையே இங்குச் சுட்டிக் காட்ட விழைகின்றேன். இவ்வுண்மையை நேரிய உள்ளம் உடைய எவரும் ஒப்புக் கொள்வர்.

கடற்செலவு செய்யும் ஒருவன் ஒரு கப்பலை இயக்கும் வழி முறைகளை மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றான். அவன், பொதுவாக மற்றவர்களைவிட தனக்குத்தான் கப்பலை நன்றாக

இயக்கத் தெரியும் என்பதினுல் மட்டும் 'கப்பல் தலைவனுக' விரும்புவதில்லை. தன்னை மற்றவர்கள் "கப்பல் தலைவரே! கப்பல் தலைவரே!" என அழைத்துப் பெருமைப் படுத்த வேண்டும் என்பதற்காகவே கப்பல் தலைவனுக விரும்புகின்றுன். கிறித்துவக் குருமார்கள், மற்றைய கிறித்தவர்களைவிடத் தங்களால் மட்டும்தாம் இயேசுவைப் பற்றியும் கிறித்துவ மதக்கருத்துகள் பற்றியும் மிகச்சிறந்த சொற்பொழிவு ஆற்ற முடியும் என்பதால்தான் "கிருத்துவக் குருவாக" மாற விரும்புவதில்லை. தம்மை எல்லோரும் "அருள்மிகு தந்தையே!" என அன்போடும் மதிப்போடும் அழைக்க வேண்டுமென்றே அப்பதவியை மேற் கொள்கின்றுர்கள்.

இவ்வாறு மாந்தனையும் மாந்த மனவியல்புகளையும் கூர்ந்து நோக்கும் பொழுது அரிய செயல் பலவற்றைச் செய்ய வேண்டும், எல்லோருக்கும் பயன் அளிக்கும் வகையில் நல்ல பல செயல்களைச் செய்ய வேண்டுமென்ற உள்ளார்ந்த ஆர்வமும், உண்மையான எண்ணமும் ஒருவன் மனத்தில் இருந்தாலுங்கூட, அச்செயல்களால் தனக்குப் பெயரும் புகழும் கிடைக்க வேண்டுமென்ற புகழ் வேட்கையே அவன் மனத்தில் அடிவூற்றமாக அமைந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

இதை இன்னுஞ் சுருங்கச் சொன்னுல் நல்ல ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்னும் உண்மையான எண்ணமும், உள்ளார்ந்த ஆர்வமும் இரண்டாம் நிலை ஊக்கியாகவும், அச்செயலால் கிடைக்கும் பெயரும் புகழுமே முதல் நிலை ஊக்கியாகவும் திகழ்கின்றன. (**Love of praise is usually the strongest motive in men's minds in seeking advancement, and the honest desire of doing any kind of duty is an entirly secondary one**).

இவ்வாறே ஒவ்வொரு மாந்தனும் தன் வாழ்வில் அடைய விரும்பும் முன்னேற்றமும், மேம்பாடும் புகழின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன.

ஒருவன் தன் வாழ்வில் மேம்பட, புகழ் அடைய உயர்ந்த பதவியையோ, நல்லதொரு பணியையோ நாடுகின்றுன். அத்துடன் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள், ஆன்றோர்கள் இவர்தம் உறவையும் தேடுகின்றுன்.

நம்மில் பலர், ஓர் அரசியல் தலைவரையோ, திரைப்பட நடிகர், நடிகையரையோ காண்பதற்கு அங்காந்து ஓடுகின்றனர். ஒரு நடிகையின் புன்முறுவலைப் பெறுவதற்கோ, ஒரு நடிகனின் கழுத்தில் மாலையிட்டுப் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கோ மணிக்கணக்காக, ஏன் நாள் கணக்காகக் கூடக் கடும் வெயில் என்றும் பனி என்றும் பாராது கால் கடுக்க நின்று காத்துக் கிடக்கின்றோம். அவர்களால் வாழ்க்கைக்குப் பயன் உள்ள ஓரிரு கருத்துகளைத்

தெரிந்து கொண்டோம் என்பதை விட, "அவர்களைக் கண்டோம்; மாலையிட்டோம்; புகைப்படம் எடுத்துக் கொண்டோம்" என்று பெருமையாகப் பீற்றிக் கொள்வதற்கென்றே அவர்களைக் காண ஓடுகின்றோம். கடும் வெயிலில் உடல் வெயர்த்து விறுவிறுக்க, நெருக்கடியிலும் இடிபாடுகளுக்கிடையிலும் பெரும் இடருற்று, பல மணிநேரம் காத்துக் கிடந்து அந்த மாமேதைகளைக் (!) காணத் துடிக்கின்றோம்.

அறிவியல் அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், மேதைகள், மெய்ப் பொருளாசிரியர்கள் இவர்களை நம்மால் எப்பொழுதும் காண முடிவதில்லை. நாம் நினைத்த பொழுதெல்லாம் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடிவதில்லை. அதனினும் அவர்களின் அரிய கருத்துகளை எப்பொழுதோ ஓரிரு முறைதான் கேட்க முடிகிறது. அவ்வாறு கேட்க நேர்கின்ற ஒரு சில வேளைகளிலும் பலமணி நேரம் காத்துக் கிடந்து அப்பயனைப் பெற வேண்டியிருக்கிறது.

ஆனால் நமக்காக மற்றோர் உலகம் காத்துக் கிடக்கின்றது. நாம் விரும்பிய நேரத்தில் மிக எளிதாகத் தொடர்பு வைத்துக் கொள்ளவும், தொட்டுப் பழகவும், நம்மோடு அன்போடும் கனிவோடும் பேசவும், நமக்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பொறுமை யோடு காத்துக் கிடக்கவும், அவ்வுலகம் எதிர் பார்த்துக் கிடக் கின்றது. அதுதான் பொத்தக உலகம். பொத்தக உலகில் உள்ள ஒவ்வொரு பொத்தகமும் நம் வரவிற்காக, நாம் படித்துப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஏக்கத்தோடு காத்துக் கிடக்கின்றது. ஆனால் அதனை நாம் பொருட் படுத்துவதில்லை.

பெயரும் புகழும் பெறுவதே நம் நோக்கம் என்றால், அதற்கு அறிஞர்கள், தலைவர்கள், மேதைகள் இவர்களின் தொடர்பு வேண்டு மென்றால் காண்பதற்கரிய, பெரும் இடரும் துன்பமும் உற்றுக் காண வேண்டிய அறிஞர்களையும், தலைவர்களையும் நேரில் சென்று காண்பதை விட, காண்பதற்கு எளிதான, நமக்காகவே அமைதி யோடும் காத்துக் கிடக்கக் கூடிய அறிஞர்களிடம் நாம் ஏன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது? பொத்தக நிலையங்களில் தலை சிறந்த அறிஞர்களும், அறிவியல் மேதைகளும், அரசியல் தலைவர்களும், வல்லுநர்களும் நூல் வடிவிலே நமக்காகவே காத்துக் கிடக்கும் பொழுது, ஆர்வத்தோடும் அக்கறையோடும் அவர்களை அணுகி, அவர்தம் அறிவைப் பெற்று நாம் ஏன் பயன் அடையக் கூடாது?

"இப்பொழுது உயிரோடு இருக்கும் தலைவர்களும், அறிஞர்களும் பண்பில் தாழ்ந்தவர்களாக இருக்கலாம். நம்மைக்கண்டு அருவெறுப்பு அடைந்து ஒதுங்கிச் செல்லலாம். இருப்பினும் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்ன கூறுகிறார்கள், என்பது நமக்குப் பெரிதன்று. அவர்களின் திருவுருவத்தைக் கண்டு இன்பம் அடைவதே நமக்

பயிரை மேயும் வேலிகள்.

—தமிழவேள்.

"வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?" என்பது ஒரு பழமொழி.

விளையும் பயிரை ஆடு மாடுகள் வந்து மேய்ந்து அழித்து விடாமல் பாதுகாப்பதற்காகப் பயிரைச் சுற்றி வேலி அமைப்பார்கள். பயிருக்குப் பாதுகாப்பாக அமைக்கப்படுகின்ற வேலியே பயிரை மேயுமானால் பயிர் எப்படி நன்றாக விளையும் என்பது அதன் பொருள்.

உயிரற்ற பொருள்களைத்தாம் பயிருக்கு வேலியாக அமைக்கிறார்கள். எனவே வேலி பயிரை மேயவே மேயாது. பின்னே இந்தப் பழமொழி எப்படிச் சரியாகும்? நேர்ப்பொருளைப் பார்த்தால் சரியில்லை தான். இது ஓர் உருவகப் பழமொழி.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கெல்லாம் பெரும் பேறுகும்" இவ்வாறு நீங்கள் கூறலாம், அல்லது உங்களுள் எண்ணிக் கொள்ளலாம்.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்; திரை போட்டு மூடப்பெற்ற ஒரு தனி அறை. அவ்வறையிலே திரைக்கு ஒரு புறத்திலே ஒரு பெரும் தலைவர் அமர்ந்திருக்கிறார். திரைக்கு மறு புறத்திலே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். திரையை விலக்கிக் கொண்டு அறைக்குள் சொல்வது கூடாது என்று தடை செய்யப் பட்டுள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள். திரைக்குப் பின்னால் இருக்கும் தலைவரின் திருவுருவத்தைக் காண இயலாவிட்டாலும், அவரின் பேச்சையாவது கேட்டு இன்புற மாட்டீர்களா? இன்புறு வீர்கள்!

அதுபோல்தான் நாம் ஒரு நூலைப் படிக்கும் பொழுது அறிஞர் களோடும், தலைவர்களோடும் நேரடியாக இயலாவிடினும் மறைமுக மான தொடர்பு வைத்துக் கொள்கின்றோம்.

மேலும், உயிரோடு வாழ்ந்துவரும் அறிஞர்களும், தலைவர்களும் தம்முன் வந்து அப்பொழுதைய நடப்புகள் பற்றியும் அப்பொழு தைக்குத் தேவையான செய்திகள் பற்றியும் பேசினாலும், விரை விலும், பரபரப்பிலும் மேம் போக்காக, பொறுப்பற்ற முறையில் பொருத்த மற்ற சொற்களைக் கொண்டு பேசிச் செல்வர்.

ஆனால் நூல் வடிவில் உள்ள அறிஞர்களும், மேதைகளும் எதையுமே பொறுப்போடும், பொறுமையோடும், ஒரு முறைக்குப் பன்முறை ஆய்ந்து பார்த்தும், சிறந்த சொல் வளத்தோடு திறம்பட எடுத்துக் கூறுவர். எனவே நூல் வடிவில் உள்ள அறிஞர்களோடு தொடர்பு கொள்வதுதான் எல்லா வகையினும் எளியது, சிறந்தது, பயனுள்ளது!

(தொடரும்)

நம் வீட்டிலுள்ள உடைமைகளைக் கள்வர் வந்து கவர்ந்து செல்லாமல் இருக்கக் காவலரை அமர்த்துகிறோம். அப்படி அமர்த்தப் படும் காவலரே வீட்டிலுள்ள உடைமைகளை கவர்ந்து செல்வாரே யானால், உடைமைக்கு எங்கே பாதுகாப்பு இருக்கும் என்னும் கருத்தையே இப்பழமொழி உணர்த்துகிறது.

தமிழ் என்னும் பயிருக்குத் தமிழ்ப் பகைவர்களால் தீங்கு நேராமல் பாதுகாப்பது தமிழர்களின் கடமையாகும். அதிலும் குறிப்பாகத் தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்த்தலைவர்கள், தமிழ் அதிகாரிகள் முதலானோர் தமிழ்ப் பயிருக்கு வேலி போலிருந்து அதனைப் போற்றிக் காத்து வரல் வேண்டும்.

ஏற்கனவே சிலர் தமிழ்ப் பயிருக்கு வேர்ப்புழுவாக இருந்து அதனை அழிக்க முயன்று வருகிறார்கள். இது வெளியே தெரியாமல் மறைமுகமாக செய்யப்படுகின்ற செயல். இன்னும் சிலர் ஆடுமாடுகள் போல் தமிழ்ப்பயிரை மேய்ந்து கெடுக்க முயன்று வருகிறார்கள். இது வெளிப்படையாகவே செய்யப்படுகின்ற செயல். இந்தச் செயலுக்குத் துணை போவது போல், தமிழ்ப்பயிருக்கு வேலியாக இருக்க வேண்டியவர்களான தமிழ் எழுத்தாளர்கள, தமிழ்த் தலைவர்கள், தமிழ் அதிகாரிகள் சிலரும் செயற்படுகிறார்களே அதனை என்னவென்று சொல்வது' வேலியே பயிரை மேய்கிறதே என்று தான் உளம் நோக வேண்டியிருக்கிறது.

அண்மையில் மறைந்துவிட்ட தமிழ் எழுத்தாளர் ஒருவர், பல்துறை அறிஞர் என்று தம்மைத் தாமே பாராட்டிக் கொண் டிருந்தவர். பற்பொடி செய்வதிலிருந்து பகவத் கீதைக்கு விளக்கம் எழுதுவது வரை தமக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர். அவர் தமிழுக்கும் தமிழருக்கும் செய்த தொண்டை விடத் தீமைகளே மிகுதி.

சில சொற்களை நாம் பேச்சு வழக்கில் எப்படிச் சொன்னாலும், எழுதுகின்றபோது அந்தச் சொற்களை மரபுப்படியும் இலக்கணப் படியுமே எழுத வேண்டும். ஒரு மொழிக்கு அரண் போன்றது அதுதான். அந்த அரணை அழிக்கின்ற வகையில், கற்கண்டு, பற்பொடி என்று எழுத வேண்டிய சொற்களைக் "கல்கண்டு" "பல்பொடி" என்று எழுதிக் கொண்டிருந்தவர் அந்த எழுத்தாளர். தமிழ் என்ற சொல்லை வேறு தம் பெயரில் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தவர் அப்படி எழுதலாமா? வள்ளலாரைத் தம் வழிபடு தெய்வமாகக் கொண்டவர், அப்படிக் கொண்ட பிறகாவது, தாம் ஆசிரியராக இருந்த கிழமை இதழின் பெயரைக் "கற்கண்டு" என்று மாற்றியிருக்க வேண்டாமா?

"தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாகக் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே"

என்னும் அருட்பாவில் வள்ளலார், 'கற்கண்டு' என்று தானே எழுதி யிருக்கிறார். 'கல்கண்டு' என்று எழுத வில்லையே!

எல்லாவற்றிலும் தூய்மையை விரும்புகின்ற நாம் மொழியிலும் தூய்மையைப் போற்றுவதுதானே முறை! உயர் தனிச் செம்மொழி யாகிய நம் தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களை எடுத்தாள்வது மொழியைச் சிதைக்கின்ற செயல் ஆகாதா? அத்தகைய செயலைப் பெருமளவில் செய்து கொண்டிருந்தவர் அந்த எழுத்தாளர்.

நாளிதழ் ஒன்றில் அவர் ஒரு தொடர் கதை எழுதினார். அந்தத் தொடர் கதையின் தலைப்பு என்ன தெரியுமா? 'சேடோ' (**Shadow**) என்பது. அந்த ஆங்கிலச் சொல்லின் பொருளைக் குறிக்கத் தமிழில் சொல்லே இல்லாததுபோல் அந்த ஆங்கிலச் சொல்லையே தலைப்பாக வைத்து அவர் எழுதியிருந்ததைப்பற்றி என்ன சொல்வது?

'நிழல்' என்பது எவ்வளவு தொன்மையான தமிழ்ச்சொல்!

"தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. —குறள் 208

"நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது" —குறள் 1309

"நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின் —குறள் 881

என்னும் குறட்பாக்களில் நிழல் என்னும் சொல் வருகின்றதே!

"ஞாயிறு காயாது மரநிழற் பட்டு" என்று குறுந்தொகைப் பாட்டு ஒன்றிலும் (குறுந் 378) நிழல் என்னும்சொல் வருகின்றதே!

வெற்றி வேற்கை என்னும் பிற்காலத்து நூலிலும் கூட நிழல் என்னும் சொல் வருகின்றதே!

"தேம்படு பனையின் திரள் பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழல் ஆகாதே!"

என்றும்,

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழல் ஆகும்மே!"

என்றும் வருகின்ற வரிகளை அந்த எழுத்தாளர் அறியமாட்டாரோ? அவற்றையெல்லாம் அவர் அறியவில்லை யென்றாலும் நிழல் என்னும் சொல் இன்றும் பேச்சு வழக்கில் இருந்து வருகின்ற சொல் என்பது

அவருக்குத் தெரியாதா? நிழல் என்னும் தலைப்பிட்டு கதை எழுதினால் அதையாரும் படிக்க மாட்டார்களா?

இப்படி ஆங்கிலச் சொற்களைத் தலைப்பாக வைத்து அவர் எழுதியுள்ள கதைகள் ஒன்றிரண்டல்ல; பல. அவர் எழுதிய துப்பறியும் கதைகள் பெரும்பாலானவற்றின் தலைப்புகள் எல்லாம் ஆங்கிலச் சொற்களே!

கதைக்கு மட்டுமன்றிக் கட்டுரைக்கும் ஆங்கிலச் சொற்களைத் தலைப்பாக வைத்து எழுதுவது அவர் வழக்கம். ஒரு முறை அவருடைய கிழமை இதழ் அட்டையில் கொட்டை எழுத்துகளில் நான்கு ஆங்கிலச் சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இதழின் உள்ளே அதே ஆங்கிலச் சொற்களைத் தலைப்பாக வைத்து தமிழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அஃது ஓர் அரசியல் கட்டுரை.

அந்தக் கட்டுரையை ஆங்கிலச் சொல் தலைப்பின்றி எழுதவே முடியாதா? அப்படி எழுதினால் தமிழர்கள் யாரும் படிக்க மாட்டார்களா? தமிழில் சொல்லாமல் ஆங்கிலத்தில் சொன்னால்தான் அந்தக் கருத்து தமிழர்கள் நெஞ்சில் பதியுமா? அந்தத் தலைப்பு இது தான், **"Old Congress is dead"**. இதனைத் தமிழில் "பழைய காங்கிரசு செத்துவிட்டது" என்று எழுதினால் எந்த வகையில் அது குறைந்து போய் விடுமோ தெரியவில்லை!

ஆங்கிலத்தில் எழுத விருப்பம் என்றால், முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே கட்டுரையை எழுதி வெளியிட்டிருக்கலாமே! தமிழில் எழுதும் கட்டுரைக்கு ஆங்கிலத் தலைப்பு ஏன்? ஆங்கிலத்தின் மீது அவ்வளவு காதல் என்றால், தமிழில் தாம் ஆசிரியராக இருந்த கிழமை இதழைப் போன்றே வேறொன்றை ஆங்கிலத்தில் **"Sugar Candy"** என்னும் பெயரிலோ அல்லது வேறெந்தப் பெயரிலோ வெளியிட்டிருக்கலாமே! அதை விட்டுத் தமிழில் பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே புகுத்தி எழுதி வந்த சொல், வேலியே பயிரை மேய்ந்த கதை அன்றி வேறு என்ன? (தொடரும்.)

"தென்மொழி" சென்னை - 5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கேட்க!

நாண்மீன் தென்மொழி ஒன்றே, எனவே. குன்றெனநிமிர்ந்து நின்று குரலெழுப்புங்கள். தாங்கள் சுட்டுந் திசையில் சுடர்முகந் தூக்கி நடையிடுவோம்: தடை கெடுப்போம். வெற்றி தமிழ்க்கென முழங்குவோம். **—பெரு. தமிழ்வேந்தன்**. பவானிசாகர்.

0:627: அன்புடையீர், வணக்கம்! சீர்திருத்தம் என்ற பெயரில் தமிழ்க்கொலை செய்யப்படுகிறது. தமிழுக்கு உறும் இக்கேட்டினைக் களைய ஆன்றோர் எவரும் இலையே என என் மனம் மிக ஏங்கியது. எதிர்க்க எமக்குத் துணிவுண்டு. ஆயின் அஃது எங்ஙனம் தவறு எனச் சுட்டிக்காட்ட ஆழ்ந்த தமிழறிவு என்னிடம் இலையே என மனத்துயரத்தில் உழன்ற பொழுதினில் உங்களது தென்மொழி கண்டேன். கழிபேருவகை கொண்டேன். தொடரட்டும் உங்கள் பணி. ஒழியட்டும் சிறுமதி படைத்தோரின் சீர்திருத்தம்.

— இல. விசயகாந்தன். கோவை-1.

0:628: பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். திசம்பர்-சனவரி "தென்மொழி" ஆசிரியவுரையைக் கற்றேன். மூடர்கள் அதற்குச் செவி சாய்க்காமல் தாளிகைகளில் எழுதித் தமிழ்க்கொலை செய்து வருவதை எண்ணும்போது அவலமே என் நெஞ்சில் ஓங்குகிறது. "தமிழர் அல்லார் தமிழகத்தின் முதல் அமைச்சராய் வாராது தடுத்தல் வேண்டும்" என்ற புரட்சிப் பாவலரின் பொய்யா மொழியைத் தமிழக மக்கள் மறந்து பகட்டிற்கு அடிமையாகிப் போனதன் விளைவே தமிழ்மொழியின் அழிவுக்கு வழிவகுத்து விட்டது. இந்த நிலையில் தமிழ் காக்கப் படவேண்டிய நிலையில்தான் உள்ளது; எனவே, தாங்கள் எவ்வாற்றானும் முயன்று அரசியற்காரர்களின் அதிகாரக் கால்களால் தமிழ் மிதிக்கப்பட்டு அழியுமுன் காத்திடல் வேண்டும். **— சி. நா. செந்தமிழ்ச்செல்வன்**. வேங்கைவாடி.

0:629: அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு என் நெஞ்சு நிறை வணக்கங்கள்! தில்லி அன்பர் தென்மொழியை அலையோசை, முரசொலி போன்ற இதழ்களோடு ஒப்பிட்டுச் சாடியுள்ளார். ஒன்றிரண்டு ஆண்டுகட்கு முன்பு அலையோசை ம. கோ. இரா. அவர்களைப் போற்றிப் பாடிய ஏடு. முரசொலியும் அவர் பிரியுமுன் புறம்பாடிய இதழ். ஆனல், தென்மொழி பழந்தமிழ் மறம் நிறைந்த தாய்க் குற்றம் கடிந்து குணத்தை வரவேற்ற ஏடு. ஒருவர் பெருவாரி மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்று விட்டால் மட்டிலும் அனைத்துத் துறைகளிலும் அறிஞரும் அதிகாரியுமாகி விடமுடியுமா? கட்சிகள் வெற்றி பெற்று 'அரசியலை' நடத்த வருகின்றன. அதற்குள்-அந்த வட்டத்திற்குள் மொழியை அதன் போக்கை மாற்றவுமா அதிகாரமுண்டு? அங்ஙனமாயின், மக்கள் பழக்க வழக்கங்களில் தலையிட ஏன் அதிகாரமில்லை? நடுநிலையிலுள்ளோர்-அதிலும் துணிவுள்ளோர் கூறுதலை ஆய்தல் வேண்டும். ஏற்றல்வேண்டும். உள்ளபடியே தமிழ் மீது அன்பும் அக்கறையுமிருக்குமாயின் அரசியற் கலப்பில்லா அறிஞர் கருத்தை ஆய்ந்தேற்றல் நன்று. இதை விடுத்து வெறுப்பும் சினமும் படுதல் அழகன்று. **—கி. பாலு**. மின்பாறை. பெரியகுளம்.

0:630: அன்பு சான்ற ஐயா வணக்கம், 'தென்மொழி' சுவடி 15 ஓலை 6-இல் பரிமளாமணாளன் மடல்பற்றிக் கருத்துத் தெரிவித்து வெளியிடப்பட்டிருந்த இரண்டு மடல்களையும் படித்ததும் எழுந்த சிரிப்பை அடுத்து வெடித்து வந்த துயரம் அடக்கிற்று. ஏறக்குறைய 78 நூற்றுமேனி உறுப்பினர்களைச் சட்டமன்றத்திலும் 24 உறுப்பினர்களை நாடாளுமன்றத்திலும் கொண்டு 5 ஆண்டுக் காலம் ஆண்ட

போது 'தமிழினத்தின் தனிக்காவலர்' என்ன செய்து கொண்டிருந்தார்? 'பணப்புழக்கம்' உள்ள திட்டங்கள் தவிர வேறு என்ன நிறைவேற்றினர்? வள்ளுவர் கோட்டம் தமிழர்களின் துன்பமெல்லாம் துடைத்துவிடும் என்று எல்லோரையும் நம்பச் சொல்கிருர்களா இவர்கள்? ஈழத்தமிழருக்கு இன்னல் வந்தபோது ஐந்திலக்கம் பேரை அணி நடத்தியவர்' பதவியிலிருந்த போது ஈழத்தமிழர்களைச் சுட்டுத் தள்ளிய பெருந்தேவியாருக்கு மாலையணிவித்தல்லவா மகிழ்ந்தார்? பதவியிலிருந்த போது வல்லாண்மை இந்தியை ஒடுக்க எண்ணுதவர் இன்று பதவி மேடை ஏறும் ஏணியாக இந்தியைக் கையாள நினைக்கிருர். அவர்கள் எத்தகையவர்களாயினும் சரியே. அவர்களுக்காகப் பரிமளாமணாளனே, பூளைமேட்டாரோ, வல்லூரரோ தயங்க வேண்டா. இவர்களைத் திருத்தமுடியாது; முயல்வதும் வீண்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

—செ. கரிகாலன். மதுரை.

0:631: அன்பு நிறை பெருஞ்சித்திரனு் அவர்களுக்கு, வணக்கம். நலம். நலமறிய அவா. தாங்கள் எனது வேண்டுகோளிற் கிணங்கி எங்களது ஈரோடு இளைஞர் கழகக் கூட்டத்தில் சொற்பெருக்காற்றியமைக்கு மிக்க நன்றி. எங்கள் உறுப்பினர்களிடையே தமிழுணர்வு பொங்கி எழுவதற்குத் தங்களின் உணர்ச்சி மிக்க தமிழ் முழக்கம் மிகப்பெரும் தூண்டுதலாக இருந்தது. தங்கள் சொற்பெருக்கைக் கேட்ட அனைவரும் மிகவும் சிறப்பித்துப் பாராட்டினர். தமிழினத்தின் வரலாறு, தமிழின் தொன்மை, தமிழின் இன்றைய நிலை, எங்கள் கழகம் போன்ற உலகம் தழுவிய கழகத்தின்-தமிழ் நாகரிகத்தைப் பரப்பும் பணி, இன்பம் விழையாமல் வினை விழைந்து தொண்டு புரியச் செல்க என்ற வள்ளுவர் கருத்தை விளக்கிய வன்மை ஆகிய சிறப்புகளை எங்கள் நண்பர்கள் உணர்ந்து போற்றினர். சிறந்த கருத்தாழமிக்க சொற்பொழிவைக் கேட்க வாய்ப்பளித் தமைக்கு என்னைப் பலர் பாராட்டினுர்கள். குறிப்பாக வினுவிற்குத் தாங்கள் விடையளித்த திறன் தங்கள் தமிழ் அறிவின் ஆழத்தையும், அகலத்தையும் புலப்படுத்தியதாக எங்களது அனைத்திந்திய இளைஞர் கழகத்தின் முன்னுள் தலைவரும், அனைத்து நாடுகள் இளைஞர் கழகத்தின் முன்னுள் துணைத் தலைவருமான திரு. கே. வல்லபதாசு அவர்கள் மிகச் சிறப்பித்துக் கூறினுர். தாங்கள் மருத்துவரின் வினுவிற்கு விடையளித்ததை-தமிழனின் தமிழ்ப் பற்றின்மை-மக்கள் பேசுகின்ற தமிழ் கலப்பானதாக உள்ளது-தமிழின் மேல் அன்பு கொண்டு தூய தமிழைப் பயன்படுத்தினுல் தமிழ் அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கும் என்று கூறியதை "வீறுகொண்டு சம்மட்டி அடி அடித்தார்; தமிழனின் தாய்மொழிப் பற்றின்மை பற்றி"-என எங்களது கழகத்தின் அனைத்திந்தியத் தலைவர் திரு. ந. முத்துசாமி அவர்கள் மிகவும் பாராட்டிப் பேசினுர். இனிமேல் "தமிழில் பேசும் பொழுது வேற்று மொழிச் சொற்களைக் கலந்து பேசேன்" என்றும் கூறினுர். இவ்வாறு தங்கள் சொற்பொழிவு தமிழுக்கு மறுமலர்ச்சியை எங்கள் நகரில் நல்கியது என்பதில் ஐயமில்லை.

துரை. செல்வமகன் (சம்பத்குமார்). ஈரோடு.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்).